பக்கங்கள் 22+ 03

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | புரட்டாதி 29 புதன்கிழமை 15.10.2025 | அதிர்வு 76


## 29 இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு!



யாழ். நெடுந்தீவுக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 29 இந் 03


‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்


## முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்கார கைது!



முன்னாள் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார, இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக் குழு அதிகாரிகளால் இன்று பகல் கைது செய்யப்பட்டுள்ளார்.

இஸ்ரேலுக்கு இலங்கையர்களை 03

# எந்தப் பலப்பரீட்சைக்கும் ஐக்கிய மக்கள் சக்தி தயார்

## மாகாண சபைத் தேர்தலை நடத்துங்கள் என்று அநுர அரசிடம் சஜித் கோரிக்கை



“ஐக்கிய மக்கள் சக்தியின் சமூக சேவைப் பயணத்திலும் அரசியல் பயணத்திலும் மக்களுடன் இருப்பதால், எந்த நேரத்திலும் எந்தத் தேர்தலுக்கும் முகம் கொடுப்பதற்கு நாம் தயாராகவே இருக்கின்றோம். ஐக்கிய மக்கள் சக்தியின் கொள்கை அடிப்படையில், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைத்துவத்தின் கீழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்க ஒன்றிணைந்து 04

# செவ்வந்தியை அழைத்து வர நேபாளம் சென்றது எஸ்.ரி.எவ்.

இஷாரா செவ்வந்தியை நாட்டுக்கு அழைத்து வருவதற்காகப் பொலிஸ் விசேட அதிரடிப் படையின் அதிகாரிகள் இருவர் நேபாளம் சென்றுள்ளனர் என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கொழும்பு, புதுக்கடை நீதிமன்றத்துக்குள் கடந்த பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த “கணேமுல்ல சஞ்சீவ” என்பவர் சுட்டுக்கொலை செய்யப்பட்டார்.

இந்தக் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய இஷாரா செவ்வந்தி நாட்டை விட்டுத் தப்பிச் சென்று தலைமறைவாக இருந்த நிலையில் நேபாளத்தில் வைத்து நேற்று 03










# வெளியேற்றப்பட்ட கோப்பாய் பொலிஸார்

(எஸ்.நிதர்ஷன்)

கோப்பாய் பொலிஸார் நீதிமன்ற உத்தரவில் வெளியேற்றப்பட்டமையால் கோப்பாய் பொலிஸ் நிலையம் தற்காலிகமாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

கோப்பாய் பொலிஸ் நிலையம், இராச பாதை வீதியில் தனியாருக்குச் சொந்தமான காணிகள் மற்றும் வீடுகளை அடாத்தாக கைப்பற்றி அமைக்கப்பட்டருந்தது.

தமது காணிகள், வீடுகளை விட்டு பொலிஸார் வெளியேற்றப்பட்டு, தமது காணிகள் மற்றும் வீடுகளை தம்மிடம் ஒப்படைக்குமாறு, யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் கடந்த 2019ஆம் ஆண்டு காலப் பகுதியில் 7 உரிமையாளர்கள் வழக்குத் தொடர்ந்தனர்.

வழக்கு விசாரணைகள் கடந்த 6 ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்று வந்த நிலையில் கடந்த ஜூன் மாதம் 27ஆம் திகதி தனியார் காணிகள், வீடுகளைப் பொலிஸார், உரிமையாளர்களிடம் மீள ஒப்படைத்து விட்டு, வெளியேற வேண்டும் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

நீதிமன்றம் தீர்ப்பளித்து இரண்டு மாதங்களுக்கு மேலாகியும், பொலிஸார் காணிகள், வீடுகளை ஒப்படைக்காத நிலையில், இன்று புதன்கிழமை நீதிமன்றப் பதிவாளரின் முன்னிலையில் பொலிஸார் அவ்விடத்தில் இருந்து வெளியேற்றப்பட்டு, காணிகள் மற்றும் வீடுகள் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டன.

கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாகத் தமது காணிகள், வீடுகளை இழந்து வாடகை வீடுகளில் தங்கியிருந்தவர்களுக்குத் தற்போது சொந்தக் காணிகள், வீடுகள் கிடைத்தமை பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கோப்பாய் பொலிஸ் நிலையம் தற்காலிகமாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

















# வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தை முற்றுகையிட்டு ஆசிரியர்கள் போராட்டம்



வடக்கு மாகாண ஆசிரியர்கள் இன்று மாகாண ஆளுநர் அலுவலகத்தை முற்றுகையிட்டு மூன்றாவது நாளாகத் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆசிரியர் இடமாற்றக் கொள்கையை சரியான முறையில் நடைமுறைப்படுத்து மாறும், கடந்த பத்து வருடங்களுக்கு மேல் பின்தங்கிய பிரதேசம் மற்றும் அதிகஷ்டப் பிரதேசங்களில் பணி புரிந்த ஆசிரியர்களுக்கான இடமாற்றங்கள் சரியான முறையில் வகுக்கப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டியும் வடக்கு மாகாண ஆசிரியர்கள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை முதல் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்துக்கு முன்பாகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் இன்று புதன்கிழமை மூன்றாவது நாளாகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர்.

போராட்டத்தின்போது ஆளுநர் அலுவலகத்தினுள் போராட்டக்காரர்கள் உட்புக முயற்சித்த வேளை பொலிஸார் அவர்களைத் தடுத்து நிறுத்தினர். அதனால் போராட்டக் களத்தில் சிறிது நேரம் பதற்ற நிலை ஏற்பட்டது.

# வல்வெட்டித்துறை நகர சபை உறுப்பினராக சிவாஜிலிங்கம் நேற்று சத்தியப்பிரமாணம்!

வல்வெட்டித்துறை நகர சபை உறுப்பினராக எம்.கே. சிவாஜிலிங்கம் சத்தியப்பிரமாணம் செய்துள்ளார்.

வல்வை முத்துமாரியம்மன் ஆலயப் பிரதம குருவும் அகில இலங்கை சமாதான நீதிவானுமாகிய தண்டபாணிக தேசிகர் முன்னிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை அவர் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலின் போது , வல்வெட்டித்துறை நகர சபையில் தமிழ்த் தேசிய பேரவை சார்பில் பட்டியல் உறுப்பினராக எம். கே.சிவாஜிலிங்கத்தின் பெயர் காணப்பட்டது

தேர்தல் முடிவுகளின்படி, பட்டியல் உறுப்பினராக பெண் உறுப்பினர்களையே தெரிவு செய்ய வேண்டும் எனத் தேர்தல் ஆணைக்குழு அறிவித்தமையால் தமிழ்த் தேசியப் பேரவை சார்பில் பட்டியல் உறுப்பினராக சிவாஜிலிங்கம் உறுப்பினராக முடியவில்லை.

இந்நிலையில், வல்வெட்டித்துறை நகர சபை உறுப்பினர் ஒருவர் தனது பதவியை இராஜினாமா செய்ததன் ஊடாக அவரது வெற்றிடத்துக்கு புதிய உறுப்பினராக சிவாஜிலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.



## 29 இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திய மீனவர்களையும் எதிர்வரும் 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் தொடர்ந்து வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட 29 இந்திய மீனவர்களின் வழக்கு இன்று புதன்கிழமை ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த செப்டெம்பர் மாதம் 28 ஆம் திகதி நெடுந்தீவுக் கடலில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுப்பட்ட 12 இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

அதேபோல் கடந்த 9ஆம் திகதி நெடுந்தீவுக் கடற்பரப்பில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுப்பட்ட 17 இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு இரு வேறு தினங்களில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்கள் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் இன்று முற்படுத்தப்பட்டிருந்தனர்.

அந்த வழக்கை விசாரித்த ஊர்காவற்றுறை நீதிவான் எதிர்வரும் 29ஆம் திகதி வரை 29 மீனவர்களையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இதேவேளை இந்த வருடத்தின் இது வரையான காலப்பகுதியில் 36 படகுகளுடன் 279 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## செவ்வந்தியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டார்.

நேபாள அரசின் உதவியுடன் இலங்கை பொலிஸார் மற்றும் சர்வதேச பொலிஸார் இணைந்து மூன்று நாள்களாக நேபாளத்தில் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பின் போது இஷாரா செவ்வந்தி கைது செய்யப்பட்டார்.

இஷாரா செவ்வந்தியுடன் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஜே.கே. பாய் உட்பட மேலும் நால்வர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட இஷாரா செவ்வந்தியை நாட்டுக்கு அழைத்து வருவதற்காக பொலிஸ் விசேட அதிரடிப் படையின் அதிகாரிகள் இருவர் இன்று புதன்கிழமை நேபாளத்துக்குச் சென்றுள்ளனர்.

இஷாரா செவ்வந்தி இன்று இரவுக்குள் நாட்டுக்கு அழைத்து வரப்படுவார் என பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## முன்னாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேலைக்கு அனுப்பிய விவகாரத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் முறைகேடு தொடர்பில் இடம்பெற்று வரும் விசாரணைகளின் பிரகாரமே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் வாக்குமூலம் அளிப்பதற்காக மனுஷ நாணயக்கார இன்று முற்பகல் முன்னிலையாகி இருந்த நிலையிலேயே கைது இடம்பெற்றுள்ளது.



## எந்தப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணியாற்ற நாம் தயார். இங்கு கட்சிகளினது தனித்துவ அடையாளங்களைப் பாதுகாத்துக் கொண்டு பணியாற்றுவோம். இந்த ஒன்றிணைவு சந்தர்ப்பவாத அரசியல் இலக்குகளை மையமாகக் கொண்டில்லாது, கொள்கை ரீதியாக நாட்டு மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பதாகவே அமையும். இதன் பொருட்டே ஒன்றிணைவோம்.”

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

கண்டி அஸ்கிரிய மகா விகாரைக்கு இன்று காலை விஜயம் செய்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, சியாம் மகா நிக்காயவின் அஸ்கிரிய மகா விகாரையின் அனுநாயக தேரர் அதி வணக்கத்துக்குரிய நாரம்பனாவே ஆனந்த தேரரைச் சந்தித்து, ஆசி பெற்றுக் கொண்டதன் பிற்பாடு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“தேர்தலை நடத்துவதாக இருந்தால், தேர்தல் நடத்தப்படும் திகதியை அறிவியுங்கள். ஐக்கிய மக்கள் சக்தி தேர்தலுக்குத் தயாராகவே உள்ளது. எந்தவொரு கருத்துக் கணிப்புக்கும், எந்தவொரு பலப்பரீட்டைக்கும் நாம் தயார்.

இந்த நாட்டை வங்குரோத்தடையச் செய்தோருக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியே உயர்நீதிமன்றத்துக்குச் சென்றது. ஐக்கிய மக்கள் சக்தியின் புத்திஜீவிகள் ஒன்றியத்தினரும் ஐக்கிய மக்கள் சக்தியின் சட்டத்தரணிகளும் ஒன்றிணைந்தே அடிப்படை உரிமைகள் மனுவை தாக்கல் செய்து, உயர்நீதிமன்றத்தில் இதற்கான தீர்ப்பைப் பெற்றுக் கொண்டது. நாட்டை வங்குரோத்தடையச் செய்தோரை நீதிமன்றத்தில் வெளிக்கொணர்ந்தது ஐக்கிய மக்கள் சக்தியே.

ஐக்கிய மக்கள் சக்தி தொடர்ந்து குரல் கொடுத்தமையினாலயே, மின்சாரக் கட்டண அதிகரிப்பைக் கைவிட வேண்டிய கட்டாயம் அரசுக்கு ஏற்பட்டது. மின்சாரக் கட்டணத்தை 33 சதவீதத்தால் குறைப்போம் எனக் கூறிய தற்போதைய அரசு, சர்வதேச நாணய நிதியத்தின் தாளத்துக்கு ஆடி, மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுத்த சமயம், ஐக்கிய மக்கள் சக்தியே அதற்கு எதிர்ப்பைத் தெரிவித்தது. இதன் பிரகாரம், அடுத்த மூன்று மாதங்களுக்கு மின்சார கட்டணங்களில் திருத்தங்களை செய்யாதிருக்க தீர்மானித்தது. அரசு கூறிய பிரகாரம், மின்சாரக் கட்டணத்தை 33 சதவீதத்தால் குறைப்பதைக் கட்டாயப்படுத்தி, எதிர்காலத்தில் மக்களுடன் இணைந்து தொடர்ந்தும் போராடுவோம்.

ஒரு கட்சியாக, ஐக்கிய மக்கள் சக்தி நல்லதை நல்லதாகவும் கெட்டதை கெட்டதாகவுமே பார்க்கின்றது. 30 வருட யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவது நல்ல விடயம் போலவே, போதைப்பொருள் வர்த்தகத்தையும் இல்லாதொழிப்பது நல்லதொரு விடயமாகும்.

போதைப்பொருள் வர்த்தகத்தை இல்லாதொழிக்கும் நடவடிக்கையைச் செய்வது யாராக இருந்தாலும், அதனால் நாட்டுக்கு நல்லது நடப்பதாக இருந்தால், அதற்காக முன்நிற்போம். இன்று பாடசாலைக் கட்டமைப்பில், ஐஸ், ஹேஷ் உள்ளிட்ட போதைப்பொருள்கள் பரவுவதைத் தடுத்தே ஆக வேண்டும்.

ஒரு நாட்டின் பொருளாதாரம் இரண்டு முக்கியப் பிரிவுகளைக் கொண்டுள்ளன. பேரியல் பொருளாதாரம் மற்றும் நுண்ணியல் பெருளாதாரம் என இவை காணப்படுகின்றன. நுண்ணியல் பெருளாதாரம் தனிப்பட்ட நுகர்வோர் மற்றும் குடும்ப அலகுகள், தனிப்பட்ட நிறுவனங்கள், தனிப்பட்ட வியாபார தொழில் முயற்சிகள் போன்ற சிறிய பிரிவுகளை கவனிக்கிறது. அரசு செய்து வரும் செயல்களால் இந்த நுண் பொருளாதார துறையினருக்கு எந்த நிவாரணமும் கிடைத்தபாடில்லை. பொருட்களின் விலைகள் அதிகரித்து, வருமானம் குறைந்து காணப்படுகின்றன. கையில் புழங்கும் பணத்தின் அளவு குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றன. இந்தப் பொருளாதார வளர்ச்சி விகிதத்தை அதிகரிப்பதற்கான திட்டம் எதுவும் இந்த அரசிடம் காணப்படுவதாகத் தெரியவில்லை. இவ்வாறு பொருளாதார வளர்ச்சி விகிதத்தை அதிகரிக்க முடியாமல் போகும் பட்சத்தில், 2028 இல் கடனைத் திருப்பிச் செலுத்துவது சிக்கலுக்குரிய ஒன்றாக மாறும் அபாயம் காணப்படுகின்றது. இதன் பொருட்டு, சகல துறைகளிலும் விரைவான பொருளாதார வளர்ச்சி அவசியம்.

வீடுகளை நிர்மாணிப்பதற்கு முன்பே வீடுகளை நிர்மாணிப்போம் எனக் காகிதத் துண்டுகளைப் பகிரும் பழக்கம் ஐக்கிய மக்கள் சக்திக்கு இல்லை. 1987 ஆம் ஆண்டு அனைவருக்கும் போதுமான வசிப்பிடத்தின் முக்கியத்துவம் உணரப்பட்டு, பத்து இலட்சம் வீடுகள், பதினைந்து இலட்சம் வீடுகள் நிர்மாணிக்கப்பட்டன. 2500 மாதிரி கிராமங்கள் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு, சுமார் 300 வீடுகள் திறந்து வைக்கப்பட்டன. 2500 வீடுகளை நிர்மாணிப்போம் எனக் கூறி வெறுமனே காகிதத் துண்டுகளைப் பகிர்ந்தளிக்கவில்லை.” – என்றார்.










### சுகாதார அமைச்சுக்கு முன்பாக

# அரச ஆயுள்வேத வைத்திய அதிகாரிகள் தொழிற்சங்க கூட்டமைப்பு கவனவீர்ப்பு!

**(அபு அலா )**

அரச ஆயுள்வேத வைத்திய அதிகாரிகள் தொழிற்சங்கத்தின் கூட்டமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட கவனவீர்ப்புப் போராட்டம் இன்று (15) மதியம் 12 மணி முதல் ஒரு மணி வரை கிழக்கு மாகாண சுகாதார அமைச்சுக்கு முன்பாக இடம் பெற்றது.

இந்த கவனவீர்ப்புப் போராட்டத்தில் மட்டக்களப்பு, அம்பாறை, கல்முனை மற்றும் திருகோணமலை பிராந்திய ஆயுள்வேத வைத்தியசாலைகளில் கடமையாற்றும் ஆயுள்வேத வைத்தியர்கள் பங்கேற்று, ஆட்சியாளர்களே “ஆயுள்வேத மருத்துவர்களுக்கும் மேலதிக சேவைக் கொடுப்பனவைப் பெறுவதற்கு உரிமை உண்டு”, “மேலதிக கடமை நேர கொடுப்பனவை உடனடியாக வழங்கு”, “ஆயுள்வேத வைத்திய சேவையின் சம்பள ஏற்றத்தாழ்வை உடனடியாக நீக்கு”, “சம்பள மறுசீரமைப்பு எங்கே”, “நிர்வாகமே மமதை வேண்டாம்”, “பிரச்சினைக்குத் தீர்வைத்தா”, “பிரச்சினைக்கு முகம் கொடுக்க அமைச்சருக்கு முதுகெலும்பில்லை”, “ஆயுள்வேத வைத்தியர்களின் உரிமைகளை பாதுகாப்போம்” என்ற பதாகைகளை ஏந்தியவாறு வைத்தியர்கள் கோசமிட்டனர்.

கடந்த 2024 ஆம் ஆண்டு முதல் இலங்கை ஆயுள்வேத மருத்துவ சேவை அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுவந்த கூடுதல் சேவை கொடுப்பனவுகள் எந்தக் காரணமும் இல்லாமல் நிறுத்தப்பட்டு 10 மாதங்கள் ஆகின்றன. இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தொடர்ந்து தெரியப்படுத்தியும், அதைத் தீர்க்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டை முன்வைத்து, இலங்கை ஆயுள்வேத மருத்துவ சேவையின் மருத்துவ அதிகாரிகளின் தொழிற்சங்கங்கள் இந்த கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட முடிவு செய்து இதில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதற்கமைவாக, கிழக்கு மாகாண ஆயுள்வேத வைத்தியசாலைகளில் கடமையாற்றும் வைத்தியர்கள், அரச ஆயுள்வேத வைத்திய அதிகாரிகள், தொழிற்சங்க கூட்டமைப்பின் உறுப்பினர்கள் இணைந்து இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறிப்பாக ஆயுள்வத மருத்துவ அதிகாரிகளின் கூடுதல் சேவை கொடுப்பனவை குறைத்துள்ள சுகாதார மற்றும் ஊடக அமைச்சகம், பொதுமக்களுக்கு ஏற்படும் சிரமத்துக்கு முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும் என்றும் குறித்த அரச ஆயுள்வேத வைத்திய அதிகாரிகள் தொழிற்சங்க கூட்டமைப்பு தெரிவித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

---

### தொட்டிலில் ஊஞ்சல் ஆடி விளையாடிக் கொண்டிருந்த

# 13 வயது சிறுமி சடலமாக மீட்பு!

### பொகவந்தலாவையில் சோகம்



நுவரெலியா, பொகவந்தலாவை, பொகவானை தோட்டப் பகுதியில் வீடொன்றில் தொட்டிலில் ஊஞ்சல் ஆடி விளையாடிக் கொண்டிருந்தார் எனக் கூறப்படும் 13 வயது சிறுமி சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று செவ்வாய்க் கிழமை மாலை 5.45மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

சிறுமியின் வீட்டுக்கு உறவினர்கள் வந்திருந்த நிலையில் உறவினரின் குழந்தைக்காகத் தொட்டில் கட்டப்பட்டுள்ளது. அதில் சிறுமி ஊஞ்சல் ஆடி விளையாடிக் கொண்டிருந்த நிலையில் அவர் தொட்டிலில் தொங்கிய நிலையில், பேச்சு மூச்சு அற்ற நிலையில் காணப்பட்டார் என்று சிறுமியின் உறவினர்கள் தெரிவித்தனர்.

தனது சகோதரி பேச்சு மூச்சு அற்ற நிலையில் இருப்பதைக் கண்ட சகோதரன், இது பற்றி தெரிவித்து அயலவர்களை அழைத்ததையடுத்து சிறுமியை மீட்டெடுத்த அயலவர்கள் பொகவந்தலாவை மாவட்ட வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர். சிறுமி உயிர்ழந்த நிலையில் வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டார் என்று வைத்தியசாலையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தனர்.

பொகவந்தலாவை பொகவானை தோட்டத்தைச் சேர்ந்த 13 வயதுடைய மதுமதன் ஜென்சியா என்ற சிறுமியே சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரிவந்துள்ளது.

இதேவேளை, சம்பவம் தொடர்பில் ஹட்டன் நீதிமன்ற பதில் நீதிவான் புபுது ஜிந்தக்க தலைமையில் மரண விசாரணைகள் இடம்பெற்று, சிறுமியின் சடலம் சட்ட வைத்திய அதிகாரியின் பிரேத பரிசோதனைக்காக டிக்கோயா கிளங்கள் ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தொட்டிலில் தொங்கி விளையாடிய போது உயிரிழப்பு நடந்ததா அல்லது வேறு ஏதேனும் நடந்துள்ளதா என்பது தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொகவந்தலாவைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ரிஷாத் பதியுதீனுக்கு எதிரான வில்பத்து வழக்கு: மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் இன்று தள்ளுபடி



இலங்கையின் வடக்கு மாகாணத்தில் முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பாக 2018ஆம் ஆண்டு முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீனுக்கு எதிராக நாகலந்த கொடிதுவக்கு மற்றும் மலிந்த சேனவிரத்ன ஆகியோரால் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் இன்று தள்ளுபடி செய்யப்பட்டது.

ஏழு ஆண்டுகளாக நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்த இந்த வழக்கில் பல தடவைகள் நீதிமன்ற உத்தரவு வழங்கப்பட்டதன் பின்னரும் வழக்குத் தாக்கல் செய்தவர்கள் நடைமுறைப்படி வழக்கை முன்னெடுக்காமையால் தீர்ப்பின்றி நீடித்து இந்த வழக்கு கொண்டு செல்லப்பட்டது.

இந்த வழக்குக்குச் சட்ட அடிப்படை எதுவும் இல்லை என்றும், உண்மையான சட்ட காரணங்களுக்காக அல்லாமல் ஊடக கவனத்தை பெறுவதற்காகவே தொடரப்பட்டதாக முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீனின் வழக்கறிஞர் ஹிஜாஸ் ஹிஸ்புல்லா நீதிமன்றத்தில் வாதிட்டார்.

மேலும் மனுதாரர்கள் தொடர்ந்து வழக்கை முன்னெடுக்கத் தவறியதால் வழக்கைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் கோரியிருந்த நிலையில், அந்தச் சமர்ப்பிப்பிற்கு இணங்க, இன்று மேன்முறையீட்டு நீதிமன்றம் இந்த ரிட் மனுவைத் தள்ளுபடி செய்தது.

மனுதாரர்களுக்காக வழக்கறிஞர் சுகந்திகா ஆஜராகியதுடன் 1 முதல் 3ஆம் பிரதிவாதிகளுக்காக உப சட்ட மா அதிபர் மனோஹரா ஜயசிங்க ஆஜராகியிருந்தார். பசில் ராஜபக்ஷவுக்காக வழக்கறிஞர் ருவந்த குரே ஆஜரானார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் சார்பாக சட்டத்தரணிகளான ஹிஜாஸ் ஹிஸ்புல்லா மற்றும் ஷிபான் மஹ்ரூப் ஆஜரானார்கள்.

நீண்ட நாட்களாக நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனுக்கு எதிராக எழுந்த இந்தக் குற்றச்சாட்டு மூலம் அவர் மீது இனவாத அரசியல் மேற்கொள்ளப்பட்டதுடன், வடக்கு மக்களின் மீள்குடியேற்றத்துக்கு எதிராகவும் பல்வேறான இனவாத செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# காணிகளை ஒழுங்குமுறைப்படுத்துவது தொடர்பில் ஆராயும் கலந்துரையாடல்







சங்கிலியன் பூங்கா மற்றும் இணுவிலில் சிறுவர் மருத்துவமனைக்காக அடையாளப்படுத்தப்பட்ட காணிகளை ஒழுங்குமுறைப்படுத்துவது தொடர்பில் ஆராயும் கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் சனிக்கிழமை (11) நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், வடக்கு மாகாண காணி ஆணையாளர், பிரதி நில அளவையாளர் நாயகம், யாழ். மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் – காணி, நல்லூர் பிரதேச செயலர், உடுவில் உதவிப் பிரதேச செயலர், யாழ். மாநகர சபையின் ஆணையாளர், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திட்டமிடல் பிரிவு மருத்துவர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# யாழில் திருமறைக் கலாமன்றத்தின் வைர விழா சனி,ஞாயிறு நாள்களில்

கலைப் பணியில் அறுபது ஆண்டுகளை நிறைவு செய்யும் திருமறைக் கலாமன்றத்தின் வைர விழா நிகழ்வுகள் எதிர்வரும் 18ஆம்,19ஆம் திகதிகளில் (சனி,ஞாயிறு) மாலை 6.30 மணிக்கு இல.238,பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் இடம்பெறவுள்ளன.இதனை முன்னிட்டு இரு நாள்களும் பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.இந்நிகழ்வுகளில் நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் திருமறைக் கலாமன்றத்தின் ஏனைய பிராந்திய தமிழ்,சிங்கள மன்றங்களும் களந்து கொண்டு கலைநிகழ்ச்சிகளை வழங்கவுள்ளன.

முதல்நாள் நிகழ்வுகளுக்கு பிரதம விருந்தினராக யாழ்,மறைமாவட்ட ஆயர் பேரருள்திரு யஸ்ரின் பேனாட் ஞானப் பிரகாசம் ஆண்டகையும், சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக தமிழ்த் துறையின் முன்னாள் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவும் கலந்து சிறப்பிப்பார்கள்.

ஆசியுரைகளை பேராசிரியர் ம.பால கைலாசநாத சர்மா, வண.கலைமாணி மீஹாஹயன்துரை சிறி விமல தேரர், அஷ்ஷைய்க் முஜிபுர் றஹ்மான் மௌலவி ஆகியோர் வழங்குவார்கள்.

கலை நிகழ்ச்சிகளாக பாணந்துறை, புத்தளம் திருமறைக் கலாமன்றங்கள் வழங்கும் நடனங்கள், திருமறைக் கலாமன்ற இளையோர் அவையினரின் ஒயிலாட்டம், திருமறைக் கலாமன்ற இசைக் கலைஞர் இ. ஜெயகாந்தனின் மெல்லிசை, இளவாலைத் திருமறைக் கலான்றம் வழங்கும் ‘பாஞ்சாலி சபதம்’ நடன நாடகம், யாழ்ப்பாணம் நாட்டார் வழக்கியற் கழகம் வழங்கும் ‘சத்தியவான் சாவித்திரி’ இசைநாடகம் போன்றவையும் இடம்பெறவுள்ளன.

இரண்டாம் நாள் நிகழ்வுகளுக்கு பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு.ம. பிரதீபனும், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக் கழக வாழ்நாள் பேராசிரியர் அ. சண்முகதாஸ்ும், கௌரவ விருந்தினராக யாழ்.மறைமாவட்ட குருமுதல்வர் அருள் திரு ப.யோ.ஜெபரட்ணம் அடிகளாரும் கலந்து சிறப்பிப்பார்கள்.

கலை நிகழ்ச்சிகளாக அவிசாவளை திருமறைக் கலாமன்றம் மற்றும் கலைத் தூது அழகியல் கல்லூரி வழங்கும் நடனங்கள், திருமறைக் கலாமன்றம் தயாரித்தளிக்கும் ‘பூதத்தம்பி’ நாட்டுக் கூத்து என்பனவற்றுடன் கலைஞர் கௌரவிப்பும், நாடகப் பயிலக மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளன. இந்நிகழ்வுகளில் அனை வரையும் கலந்து சிறப்பிக்குமாறு திருமறைக் கலாமன்றம் அழைப்பு விடுத்துள்ளது.




# ஆயுள்வேத மருந்தகத்துக்கு எந்நேரம் சென்றாலும் வைத்தியர் எவருமே கடமையில் இருப்பதில்லை!

## இறக்காமம் சபையில் உரையாற்றிய உறுப்பினர்

(அபு அலா)

இறக்காமம் ஆயுள்வேத மத்திய மருந்தகத்தில் கடமையாற்றும் வைத்தியர் கடந்த 7 வருடங்களாக தனது கடமை நேரத்தில் மருந்தகத்தில் இருப்பதில்லை என்றும் அந்த விடயத்தை ஊழியர்கள் மறைத்து வருகின்றார்கள் எனவும் இறக்காமம் பிரதேச சபை உறுப்பினர் எஸ்.எல்.எம்.ரஜா நேற்று இடம்பெற்ற (14) சபை அமர்வின்போது உரையாற்றினார்.

இறக்காமம் பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நேற்று (14) தவிசாளர் எம்.முஸ்மி தலைமையில் இடம்பெற்றது. அங்கு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில்,

பொது மக்கள் தங்களுக்கு ஏற்பட்டுள்ள நோய்க்கான சிகிச்சைகளையும், வைத்திய ஆலோசனைகளையும்



பெற்றுக்கொள்வதற்காக எந்த நேரம் மருந்தகத்துக்குச் சென்றாலும் வைத்தியர் கடமையில் இருப்பதில்லை. அவர் இப்போதுதான் வெளியே சென்றுள்ளார் என்ற பதில் மட்டுமே ஊழியரால் வழங்கப்பட்டு வருகிறது என்று மக்கள் முறையிட்டுள்ளனர். இந்த முறைப்பாடுகளைத் தொடர்ந்து நோயாளியைப் போன்று குறித்த மருந்தகத்துக்குச் சென்றிருந்தேன்.

மக்கள் வழங்கிய முறைப்பாடுகள் யாவும் 100 சதவீதம் உண்மையென்று சென்றே பின்பே நான் அறிந்து கொண்டேன்.

கடந்த 7 வருடங்களாக கடமையாற்றும் அந்த வைத்தியர் இந்தத் தவறை செய்தது மாத்திரமல்லாமல், மாதாந்த ஊதியம், மேலதிகக் கொடுப்பனவுகள் போன்றவற்றையும் முறையற்ற விதத்தில் பெற்றும் வந்துள்ளார்.

அதனை மறைக்கும் செயற்பாட்டில் அங்கு கடமையாற்றும் ஊழியர்களும் குறித்த வைத்தியருக்கு ஆதரவாகவும் ஈடுபட்டும் வந்துள்ளனர்.

குறிப்பாக, வைத்தியருக்குப் பதிலாக ஊழியர்களே நோயாளிகளுக்கு மருந்து வழங்கி வருகின்ற அவல நிலையையும் நான் கண்டுகொண்டேன். இது எனக்கும் நடந்தது என்றும் அவர் சுட்டிக்காட்டினார். இதுதொடர்பான வீடியோ ஆதாரமும் வைத்துள்ளேன்.- என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அகழ்வு நடவடிக்கை பாதிப்பு

இலங்கையின் இரண்டாவது பெரிய மனிதப் புதைகுழி என்று கருதப்படும் செம்மணி மனிதப் புதைகுழியில் மேலும் இரண்டு மாத அகழ்வாய்வு நடவடிக்கைகளுக்காகக் கோரப்பட்ட சுமார் இரண்டு மில்லியன் ரூபா நிதியை, நீதி அமைச்சு வழங்கியுள்ளது. ஆனாலும் நிதி கிடைத்தாலும் இந்த நிதியின் கீழான அடுத்த - மூன்றாவது - கட்ட அகழ்வு நடவடிக்கைகள் இனி எப்போது நடக்கும் என்பதுதான் கேள்வி.

நிதி கிடைத்தாலும், தற்போது யாழ்ப்பபாணம் செம்மணி சித்துப் பாத்தி இந்து மயான மனிதப் புதைகுழி பிரதேசத்தில் பெய்து வரும் மழை காரணமாக, அடுத்த கட்ட அகழ்வாய்வுப் பணிகளை ஆரம்பிப்பது சாத்தியமில்லை என அகழ்வாய்வு நிபுணர்கள் கூறுகின்றனர்.

செம்மணி மனித புதைகுழி தொடர்பான வழக்கு, நேற்றுமுன் தினம் யாழ்ப்பாணம் நீதிவான் செல்வநாயகம் லெனின்குமார் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த விவரங்கள் தெரிவிக்கப்பட்டன.

நேற்றுமுன்தினம் நீதிமன்ற நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர், சட்டத்தரணிகள், காணாமல் போன ஆள்கள் பற்றிய அலுவலக அதிகாரிகள் மற்றும் அகழ்வாய்வு நிபுணர்களுடன் யாழ்ப்பாணம் நீதிவான் செம்மணி சித்துப் பாத்தி மனித புதைகுழியைப் பார்வையிட்டுள்ளார்.

அகழ்வாய்வு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான நிபுணர்கள், அகழ்வாய்வு நடைபெறும் இடத்தில் சில இடங்களில் ஏற்கனவே மழைநீர் தேங்கி நிற்பதாகவும், இந்த நாள்களில் அப்பகுதியில் மழை பெய்து வருவதால், இந்த நேரத்தில் அகழ்வாய்வுப் பணிகளை ஆரம்பிக்க முடியாது எனவும் நீதவானிடம் தெரிவித்துள்ளனர். இந்த வழக்கை நவம்பர் 3, 2025 அன்று மீண்டும் எடுக்க நீதிவான் தீர்மானித்துள்ளார்.

இரண்டாம் கட்ட அகழ்வுப் பணி செப்டம்பர் முதல் வாரத்தில் முடிவுற்ற சமயத்திலேயே அடுத்த கட்ட நிதி ஒதுக்கீடு கிடைத்திருந்தால் மேலும் கணிசமான அளவுக்கு அகழ்வு நடவடிக்கையை முன்னெடுத்து இருக்க முடியும்.

இந்த நிதி ஒதுக்கீடு கிட்டுவதற்குத் தாமதித்தால் மழைக்காலம் முடியும் வரை அடுத்த - மூன்றாவது - கட்ட அகழ்வு நடவடிக்கையை முன்னெடுக்க முடியாது என்பதை ஏற்கனவே இந்தப் பத்தியில் கோடி காட்டி இருந்தோம். அதுதான் நடக்கப் போகின்றது.

இனி மழைக்காலம் தொடங்கி விட்டது. தைப் பொங்கலுக்குப் பின்னர்தான் மழை கொஞ்சம் விட்டுப் பிடிக்கும். அதற்கு இடையில் மழை அடங்கி விட்டது என்று நம்பிக் களத்தில் இறங்க முடியாது.

அகழ்வு நடவடிக்கைக்கு நீதிமன்றம் தயாராக இருந்தபோது - இயற்கை இடம் அளித்த சமயம் - நிதி ஒதுக்கீடு கிடைக்கவில்லை. நிதி ஒதுக்கீடு கிடைத்த சமயம் இயற்கை ஒத்துழைக்கவில்லை.

இயற்கையின் நிலைமையை புரிந்துதான் நிதி ஒதுக்கீடு இழுத்தடிக்கப்பட்டதா என்பதுதான் கேள்வி. அதைத்தான் நேரத்துடனேயே நாம் சுட்டிக்காட்டி எச்சரித்திருந்தோம்.





# நல்லூரில் வேலன் சுவாமியை சந்தித்த கஜேந்திரகுமார் எம்.பி.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தவத்திரு வேலன் சுவாமியைச் சந்தித்து நீண்ட நேரம் கலந்துரையாடியுள்ளார்.

யாழ். நல்லூரில் அமைந்துள்ள சிவகுரு ஆதீனத்தில் வேலன் சுவாமியை நேற்று செவ்வாய்க்கிழமை நேரில் சந்தித்து, சமகால அரசியல் தொடர்பில் அவர் கலந்துரையாடியுள்ளார்.

சுமார் ஒன்றரை மணிநேரத்துக்கு மேல் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரனும் கலந்துகொண்டிருந்தார்.





# இலங்கை விவசாயிகள் தொழில்முனைவோர் அமைய கொள்முதல் நிலையங்கள் யாழ். மாவட்டத்துக்கு வருகை!

## ஆளுநருடனான சந்திப்பில் தெரிவிப்பு

நவீன தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திச் சுரண்டலற்ற முறையில் விவசாயிகள் தங்களுடைய உற்பத்திகளுக்கு நியாய விலை கிடைப்பதற்கு வழியேற்படுத்துவதும் நோக்கில் இலங்கை விவசாயிகள் தொழில்முனைவோர் அமையம் யாழ். மாவட்டத்தில் கொள்முதல் நிலையங்களை எதிர்வரும் நவம்பர் மாதம் நிறுவுவதற்கு எதிர்பார்த்துள்ளன என்று ஆளுநருக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கை விவசாயிகள் தொழில்முனைவோர் அமையத்தின் பிரதிநிதிகளுக்கும், வடக்கு மாகாண ஆளுநர் தலைமையிலான அதிகாரிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் வியாழக்கிழமை (09) நடைபெற்றது.

“GoVimart” என்னும் ஒன்றிணைந்த அணுகுமுறையூடாக, விவசாய உற்பத்திகளுக்கு நிலைபேறான தீர்வை நோக்கி நகர்த்துவதனுடன் விவசாயிகளை தொழில்முனைவோராக்கும் முயற்சியில் இலங்கை விவசாயிகள் தொழில்முனைவோர் அமையம் ஈடுபட்டுள்ளது. வெளிநாடுகளில் வெற்றிகரமாக செயற்படுத்தப்படும் நவீன தகவல் தொழில்நுட்ப பொறிமுறையில் அமைந்த தொகுதித் தொழில்நுட்ப (Block Chain) வடிவமைப்பை அடிப்படையாகக் கொண்டு இந்த அமைப்பு அதைச் செயற்படுத்தி வருகின்றது.

இந்த நிலையில் இந்த அமைப்பு தனது சேவைகளை வடக்கு மாகாணத்துக்கும் விரிவாக்குகின்றது. இது தொடர்பில் வடக்கு மாகாண விவசாய அமைச்சு, வடக்கு மாகாண விவசாயத் திணைக்களம் ஆகியனவற்றுடன் இணைந்து விவசாயிகள், விவசாய கம்பனிகள் உள்ளிட்ட பல தரப்பினரையும் களப் பயணம் மேற்கொண்டு கலந்துரையாடல்களை நடத்தியிருந்தது.

இது தொடர்பில் ஆளுநர் செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடல்களில் ஆளுநருக்கு விளக்கமளிக்கப்பட்டது. இதனை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக விவசாயிகள் தங்கள் உற்பத்திப் பொருள்களுக்கு நிலையான விலையைப் பெற்றுக் கொள்ள முடியும் என்ற உத்தரவாதமும் வழங்கப்பட்டது. அத்துடன் நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி விவசாய உற்பத்தியிலிருந்து விற்பனை வரையில் இடம்பெறுவதால் சிறப்பானதாக அமையும் எனவும் ஆளுநருக்குத் தெரியப்படுத்தப்பட்டது. அடுத்த மாதமளவில் யாழ். மாவட்டத்தில் இரண்டு இடங்களில் தமது கொள்வனவு நிலையங்களை அமைக்கவுள்ளதாகவும் அவர்கள் இதன்போது ஆளுநருக்கு சுட்டிக்காட்டினர்.

ஆளுநர் செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில், வடக்கு மாகாண பிரதம செயலாளர், ஆளுநரின் செயலாளர், விவசாய அமைச்சின் செயலாளர், விவசாயத் திணைக்களப் பணிப்பாளர், யாழ். மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர், கமநலசேவைகள் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் ஆகியோர் பங்கேற்றனர்.









# கிழக்கு பல்கலைக்கழக திருமலை வளாக ஏற்பாட்டில் சர்வதேச ஆராய்ச்சி மாநாடு!

(எஸ்.கீதபொன்கலன்)

கிழக்கு பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகம், தமிழ் நாட்டின் சென்னையில் அமைந்துள்ள சமுத்திரவியல் பல்கலைக்கழகத்துடன் இணைந்து "நிலையான சுற்றுச் சூழல் – நீதியான சமூகத்தின் மூலம் அமைதியை அடைதல் என்பவற்றுக்குக் கலாச்சாரங்கள் மற்றும் விஞ்ஞான தொழில்நுட்பங்களை இணைத்தல்" என்ற தலைப்பில் சர்வதேச ஆராய்ச்சி மாநாடு ஒன்றை எதிர்வரும் 23 ஆம் திகதி நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

இந்த மாநாடு 7 ஆவது தடவையாகத் திருகோணமலை வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இந்த மாநாடு தொடர்பில் நேற்று (14) நடைபெற்ற ஊடக சந்திப்பில் வளாக முதல்வர் மருத்துவ பேராசிரியர்.கே.டி. சுந்தரேசன் தெரிவிக்கையில்,

2016 ஆம் ஆண்டு இத்தகைய சர்வதேச ஆராய்ச்சி மாநாடு இங்கு முதன் முறையாக நடைபெற்றது. அதன் தொடர்ச்சியாக இந்த ஆண்டு 7 ஆவது தடவையாக மாநாடு நடைபெறவுள்ளது.

2025 மாநாட்டின் கருப்பொருள் சுற்றுச்சூழல் நிலைத்தன்மை, சமூக நீதி மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றம் ஆகியவற்றுக்கு இடையேயான நல்லிணக்கத்தின் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டுவதாகும்.

இந்த மாநாடு ஆராய்ச்சி முடிவுகளைப் பகிர்ந்து கொள்ளவும், முன்னோக்குகளைப் பரிமாறிக்கொள்ளவும், அறிவுசார் ஒத்துழைப்பு மூலம் நவீன உலகளாவிய மற்றும் பிராந்திய பிரச்சினைகளுக்கான தீர்வுகளை ஆராயவும் ஒரு தளத்தை ஏற்படுத்துகின்றது.

இந்த முறை, எட்டு வெவ்வேறு தலைப்புகளின் கீழ் மொத்தம் 93 ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன. அவற்றில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 73 ஆய்வுக் கட்டுரைகள் மகாநாட்டு நாளில் முன் வைக்கப்படவுள்ளன. இந்தியா உற்பட எட்டிற்கும் அதிகமான நாடுகளில் இருந்து ஆய்வாளர்கள் மகாநாட்டில் பங்குபற்ற உள்ளனர்.

நிகழ்வின் முதன்மை விருந்தினராக கிழக்கு மாகாண ஆளுநர், பேராசிரியர் ஜயந்தலால் ரத்தணசேகரவும், கௌரவ விருந்தினர்களாகத் தமிழ் நாடு சமுத்திரவியல் பல்கலைக்கழகத்தின் கல்வியியல் ஆலோசகர், கலாநிதி என். கோதண்டராமன் மற்றும் கிழக்கு பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் பேராசிரியர் பி.பிரதீபன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளார்.

பிரதான ஆரம்ப பேச்சாளர்களாக பேராதனை பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர், பேராசிரியர் டெரன்ஸ் மதுஜித் மற்றும் இந்தியாவின் ஹதரபாத் மனித பாதுகாப்பு கல்வி மையத்தின் பணிப்பாளர், கலாநிதி ரமேஸ் கண்ணேகந்தி ஆகியோர் உரையாற்றவுள்ளனர.– என்றார்.







# கண்டி, நுவரெலியா ஆலயங்களுக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தால் உதவிகள்

சந்நிதியான் ஆச்சிரமம் கண்டி, நுவரெலியா மாவட்ட ஆலயங்களுக்கு 6 லட்சத்து 25 ஆயிரம் ரூபா உதவிகள் வழங்கியுள்ளது.

நுவரெலியா – போஹல் கீழ்பிரிவு, கெட்டபுலா பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தின் கோரிக்கைக்கு அமைவாக, ஆலய கட்டுமானப் பணிக்காக 100,000 ரூபா நிதி நிர்வாகத்தினரிடம் வழங்கப்பட்டது.

நுவரெலியா – கெட்டபுலா நடுப்பிரிவு, கெட்டபுலா பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தின் கோரிக்கைக்கு அமைவாக, ஆலய கட்டுமானப் பணிக்காக 25,000 ரூபா நிதி நிர்வாகத்தினரிடம் வழங்கப்பட்டதுடன் ஆலய வர்ணப்பூச்சுக்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன.

கண்டி – ரிலாகல பிரிவு, வெஸ்ட்ஹோல் தோட்டம் பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தின் கோரிக்கைக்கு அமைவாக, ஆலய கட்டுமானப் பணிக்காக 100,000 ரூபா நிதி நிர்வாகத்தினரிடம் வழங்கப்பட்டது.

நுவரெலியா – தலப்பத்தன தோட்டம், கெட்டபுலா, நாவலப்பிட்டிய பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தின் கோரிக்கைக்கு அமைவாக, ஆலய கட்டுமானப் பணிக்காக 100,000 ரூபா நிதி நிர்வாகத்தினரிடம் வழங்கப்பட்டது.

கண்டி – பேட்டர்கன் பிரிவு, பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தின் கோரிக்கைக்கு அமைவாக, ஆலய கட்டுமானப் பணிக்காக 100,000 ரூபா நிதி நிர்வாகத்தினரிடம் வழங்கப்பட்டது.

கண்டி – தும்பகஸ்தலாவ, பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தின் கோரிக்கைக்கு அமைவாக, ஒஆலய கட்டுமானப் பணிக்காக 100,000 ரூபா நிதி நிர்வாகத்தினரிடம் வழங்கப்பட்டது.

நுவரெலியா – குயின்ஸ்பெரி மேற்பிரிவு, கெட்டபுலா பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தின் கோரிக்கைக்கு அமைவாக, ஆலய கட்டுமானப் பணிக்காக 100,000 ரூபா நிதி நிர்வாகத்தினரிடம் வழங்கப்பட்டது.

நேற்று (14) செவ்வாய்க்கிழமை இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் செ.மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று இதனை வழங்கி வைத்தார்.













# யாழைச் சேர்ந்த மூன்று ஊடகவியலாளர்கள் அம்பாறையில் இடம்பெற்ற நிகழ்வில் கௌரவிப்பு

**(பூ.லின்ரன்)**

அம்பாறையில் இடம்பெற்ற சாதனையாளர்கள் கௌரவிப்பு விழாவில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த மூன்று ஊடகவியலாளர்கள் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

அம்பாறை சாய்ந்தமருதுவில் 2025 ஆண்டு சாதனை யாளர்கள் கௌரவிப்பு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

இந்த நிகழ்வானது குரு வலையமைப்பின் இரண்டாம் கட்ட விருது வழங்கும் நிகழ்வாக இடம்பெற்றது. இந்த நிகழ்வில் சாதனை உலகில் இலங்கை முழுவதும் இருந்து சாத னையாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

அதன் தொடர்ச்சியாக ஊடக உலகின் தலைசிறந்த ஊடக வியலாளர்கள் எனும் பிரிவில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த பு.கஜிந்தன் என்பவர் மனித உரிமைகள் சார் ஊடகவியலாளர் எனும் விருதையும் யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கை சேர்ந்த




பூ.லின்ரன் என்பவர் சிறந்த ஊடகவியலாளர் என்ற விருதையும் மற்றும் யாழ்பாணத்தை சேர்ந்த சுபேசன் என்பவர் சிறந்த ஆவணப்படுத்தல் ஊடகவியலாளர் என்ற விருதையும் தம தாக்கிக் கொண்டு யாழ். மண்ணுக்கு பெருமை சேர்த்துள்ளனர்.





# மருக்காரம்பளை வட்டாரத்தில் மக்கள் குறைகேள் சந்திப்பு!



வவுனியா பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட மருக்காரம்பளை வட்டாரத்திலுள்ள பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுடன் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் குறைகேள் சந்திப்பு ஒன்றை நடத்தியுள்ளார்.

கணேசபுரம் சேவாலங்கா பொது நோக்கு மண்டபத்தில் இந்தக் குறைகேள் சந்திப்பு இடம்பெற்றது.

பல்வேறு பிரச்சினைகள் மற்றும் விடயங்கள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினருக்கு இதன்போது மக்களால் தெரியப்படுத்தப்பட்டது.

காணி உறுதிப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ளல், தேசிய வீடமைப்பு அதிகார சபையால் வழங்கப்பட்டு குறையாகவுள்ள வீட்டுத் திட்டங்களை பூரணப்படுத்தல், வீதித்திருத்தங்கள், வீதி விளக்குகளின் தேவைப்பாடுகள், ஆகியன தொடர்பில் விசேடமாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதன்போது வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் தவிசாளர் பாலகிருஸ்ணன் பாலேந்திரன், மருக்காரம்பளை வட்டார பிரதேசசபை உறுப்பினர்களான திருமதி பத்திமா கெபிரியேல், இ.இராமகிருஸ்ணன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினரின் செயலாளர் பாலச்சந்திரன் சிந்துஜன் ஆகியோரும் இணைந்திருந்தனர்.



Mon-Sat
Hp World - 077 359 4363 | Jaffna - 077 766 7975 | Exclusive - 076 359 4359
Mannar - 076 359 4368 | Kilinochchi - 076 359 7610




# சிறந்த ஊடகவியலாளரை கௌரவித்து விருது வழங்கும் விழா அம்பாறையில்

(அபு அலா)

ஊடக உலகில் சிறந்து விளங்கும் சாதனையாளர்களைக் கௌரவிக்கும் பிரம்மாண்டமான விருது வழங்கும் விழா குரு ஊடக வலையமைப்பின் முகாமைத்துவ பணிப்பாளர் ஹிசாம் ஏ. பாவா தலைமையில் சாய்ந்தமருது லீ மெரிடியன் மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை (12) இடம்பெற்றது.

குரு ஊடக வலையமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இவ்விருது வழங்கல் விழாவுக்கு மயோன் குரூப் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளரும் தொழிலதிபருமான எம்.எம்.றிஸ்லி முஸ்தபா பிரதம அதிதியாகவும், வசந்தம் தொலைக்காட்சி செய்திப் பிரிவின் முகாமையாளர் எம்.எஸ்.எம்.இர்பான் விஷேட அதிதியாகவும், சட்டத்தரணி எம்.கே.எம்.பர்சான், நெஸ்ட் நிறு வனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் பொறியாளர் என்.எம்.சப்னாஸ் ஆகியோர் கௌரவ அதிதிகளாவும் கலந்துகொண்டனர்.

ஊடகத்துறையில் சிறந்த சாதனையாளர்களை உலகுக்கு அடையாளங்காட்டும் இந்த உன்னதமான இவ்விருது வழங்கும் விழாவின்போது 2024- 2025 இக்கான "சிறந்த சுகாதார மருத்துவ ஆக்கத்துக்கான விருது" ஊடகவியலாளர் மட்டு.துஷாராவுக்கும் (திருமதி துஷ்யந்தி சுரேஸ்), சிறந்த சுற்றுச்சூழல் ஆக்கத்திற்கான விருதினை சிரேஷ்ட ஊடகவியலாளர் பைஷல் இஸ்மாயிலுக்கும் வழங்கி வைக்கப்பட்டன.

மேலும் சிறந்த விவரணம், சிறந்த மனிதாபிமான உரிமை தொடர்பான ஊடகவியலாளர்கள், சிறந்த வானொலி அறிவிப்பாளர்கள், சிறந்த விளையாட்டுத்துறை செய்தி அறிக்கையாளர், சிறந்த இளம் யூடியூப்பாளர்கள், சிறந்த கவிதை எழுத்தாளர், ஊடகத்துறையின் வாழ்நாள் சாதனையாளர் போன்ற பல்வேறுபட்ட துறைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஊடகவியலாளர் களுக்கும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.













# அனுமதியற்ற வியாபார கொட்டில்கள் தற்காலிகக் கடைகள் அகற்றல்

(பாறுக் ஷிஹான்)

கல்முனை மாநகர சபைக்கு உட்பட்ட பல்வேறு வீதிகளில் உள்ள அனுமதியற்ற வியாபார கொட்டில்கள் பாதை இரு மருகிலும் அமைந்துள்ள தற்காலிக கடைகள் மற்றும் பாதுகாப்பு அற்ற முறையில் வீதியில் வைத்துள்ள விளம்பர விற்பனைப் பலகைகள் அகற்றப்பட்டு வருகின்றன.

இந்த நடவடிக்கையின் போது நற்பிட்டிமுனை தாளவெட்டுவான் சந்தி கல்முனை மாநகர பகுதி உள்ளடங்கலாக இவ்வாறு பாதுகாப்பு அற்ற முறையில் வீதியில் வைத்துள்ள விளம்பர விற்பனை பலகைகள் அகற்றப்பட்டு வருகின்றன.

கல்முனை மாநகர சபைக்கு உட்பட்ட பிரதான வீதிகளில் வாகனப் போக்குவரத்து மற்றும் பாதசாரிகளின் நடமாட்டத்துக்கு இடையூறு ஏற்படுவதால் கல்முனை மாநகர சபைக்கு உட்பட்ட பிரதான வீதிகளில் வியாபாரம் செய்யும் வியாபாரிகளுக்குக் கல்முனை பொலிஸார் பின்வரும் விடயங்களை கவனத்தில் கொள்ளுமாறு அறிவித்தல் விடுத்துள்ளனர்.

வியாபாரப் பொருள்கள் மற்றும் வியாபாரத் தளங்களின் விளம்பர பலகைகளை வீதிகளில் வைத்தல் வாகனங்களை நீண்ட நேரமாக வீதிகளில் நிறுத்தி வைத்தலும் மற்றும் திருத்த வேலை செய்தல், உணவுப் பொருள்களையும் மற்றும் பழ வகைகளையும் பாதுகாப்பற்ற முறையிலும் திறந்த நிலையில் விற்பனை செய்தல், கால் நடைகளைப் பாதுகாப்பற்ற நிலையில் வீதிகளில் நடமாடவிடல் கழிவு நீர்களை வீதிகளில் விடுதல் போன்ற குற்றச் செயல்களைத் தொடர்ச்சியாகச் செய்து வருவதால் பொது மக்கள் பல வகையான சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.

ஆகையால் இவ்வாறான செயற்பாடுகளில் இருந்து தவிர்ந்துக் கொள்ளுமாறும் பொது மக்கள் சிரமங்கள் அசௌகரியங்களிலிருந்தும் பயணிப்பதற்கு உதவுமாறு வியாபாரிகளாகிய உங்களை கேட்டுக் கொள்கின்றேன் என கல்முனை தலைமையக பொலிஸ் மோட்டார் போக்குவரத்து பிரிவு பொறுப்பதிகாரியும் பிரதான பொலிஸ் பரிசோதகருமான பி.ரி நஸீர் குறிப்பிட்டுள்ளார்.

அதிகரித்துவரும் வீதி விபத்துக்களால் ஏற்படும் மரணத்தைத் தவிர்க்கும் முகமாக இவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் பொது மக்கள் ஒத்துழைப்புக்களை வழங்க முன்வர வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இந்த நடவடிக்கையானது கல்முனை பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் எம்.கே.இப்னு அஸாரின் ஆலோசனைக்கு அமைய கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லசந்த களுவாராய்ச்சியின் வழிகாட்டலில் மேற்கொள்ளப்பட்டது. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் உயரதிகாரிகள் கல்முனை மாநகர சபையின் வருமான வரி அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.



# செய்திகளை சொல்லும் சுதந்திரம்: மனிதாபிமானம் எங்கே?

இன்றைய உலகம் தகவல் தொழில்நுட்பத்தின் வேகமான வளர்ச்சியால் நிறைந்துள்ளது.

தொலைக்காட்சி, இணையம், சமூக ஊடகங்கள் என பல வழிகளில் செய்திகள் சில நொடிகளில் உலகம் முழுவதும் பரவுகின்றன. இதன் மூலம் மக்களுக்கு தகவல் அறியும் உரிமை கிடைக்கின்றது என்பதில் ஐயமில்லை. ஆனால் இந்தச் சுதந்திரம் பல இடங்களில் மனிதாபிமான உணர்வுகளை மங்கச் செய்கின்றது. என்பது வருத்தமான உண்மை. இன்று யாரிடமும் ஒரு ஸ்மார்ட்போன் இருந்தாலே சமூக ஊடகங்களை அணுக முடிகிறது. தகவல் பரிமாற்றம் நொடிகளில் நிகழ்கிறது. ஆனால் அதனுடன் வரவேண்டிய நெறிமுறைகள், மனிதாபிமானக் கடமைகள், சமூகப் பொறுப்புகள் புறக்கணிக்கப்படுகின்றன.

இன்றைய உலகம் தகவல் தொழில்நுட்பத்தின் விரைவான முன்னேற்றத்தால் மாற்றமடைந்துள்ளது. மொபைல் போன், இணையம், சமூக ஊடகங்கள் போன்றவை இன்று ஒவ்வொருவரின் கைகளிலும் உள்ளன. ஒரு சம்பவம் நிகழ்ந்த சில நொடிகளில் அது உலகம் முழுவதும் பரவி விடுகிறது. இது தகவல் அறியும் சுதந்திரத்தை மக்களுக்கு வழங்கியுள்ளதுடன் மனிதாபிமானத்தின் எல்லையை தாண்டும் நிலையையும் உருவாக்கியுள்ளது.

### சமூக ஊடகங்கள் அனைவரின் கைகளிலும்

இன்றைய நவீன யுகத்தில் தகவல் பரிமாற்றம் ஒரு விரைந்த ரயிலாக மாறிவிட்டது. அந்த ரயிலின் ஓட்டுநர் சமூக ஊடகங்களாக இருக்கின்றன. இணையத்துடனான போதிய அணுகலும், ஸ்மார் ட் கைபேசிகளின் விரிவான பரவலும் சமூக ஊடகங்களை (Facebook, WatsApp, Instagram, TikTok, YouTube) மக்கள் பல தரப்பினரிடமும் அணுகக் கூடியதாக மாற்றியுள்ளன. இந்த வளர் ச்சி மக்களுக்கு தகவல் பகிரும் வாய்ப்பை வழங்கியுள்ளதோடு, சில நேரங்களில் உண்மையற்ற தகவல்கள், தவறான விளக்கங்கள், மற்றும் தனியுரிமை மீறல்களையும் அதிகரித்துள்ளது.

ஒரு காலத்தில் ஊடகங்களின் கட்டுப்பாடு பத்திரிகைகள், ரேடியோக்கள், தொலைக்காட்சிகளுக்குள் மட்டுமே இருந்தது. ஆனால் இன்று ஒரு சாதாரண மாணவனும், வீதியோரம் வாழும் கடைக்காரனும், ஓய்வுபெற்ற மூதாட்டியும் கூட சமூக ஊடகங்களைப் பயன்படுத் தும் நிலை உருவாகியுள்ளது. இதனால் ஒரு செய்தி சில நொடிகளில் இலங்கையில் இருந்து உலகின் மற்றத் தேசங்களுக்கே விரைந்துகொள்ளும் திறனைப் பெற்றுள்ளது.

ஒரு பக்கம் இது மக்களின் உரிமைகள், சமூக நீதி போன்றவற்றுக்காக குரலெழுப்பும் இடமாக மாறியுள்ளது. ஆனால் மறுபக்கம் தகவல்களின் தவறான பரவல், தனியுரிமை மீறல்கள் உணர்வு புர்வமான விடயங்களை உணர்வின்றிப் பகிர்வது போன்றவையும் அதிகரித்து வருகின்றன.

சுருக்கமாகச் சொல்வதெனில் சமூக ஊடகங்கள் இன்று அனைவரது கையிலும் உள ளது. ஆனால் அவற்றைப் பயன்படுத்தும் பொழுது அறமும் மனிதாபிமானமும் என்றென்றும் நம் நெஞ்சில் இருக்க வேண்டிய கட்டாயம் அதிகமாகியுள்ளது.

### அண்மைய சம்பவங்கள் ஒரு கண்ணோட்டம்

சமூக ஊடகங்களின் வெகுஜன பயன்பாடு இன்று பலரையும் தூண்டுபவை மட்டுமல்லாது, தாக்குபவை என்றும் மாறிவிட்டது. அண்மையில் யாழ்பாணத்தின் சங்குபிட்டி பாலத்தில் காணப்பட்ட பெண்ணின் உடல் தொடர்பான செய்தி அதனைத் தொடர்ந்து சமூக



ஊடகங்களில் வெளிவந்த புகைப்படங்கள், வீடியோக்கள் இவை அனைத்தும் ஒரு வேதனையான உண்மையைச் சுட்டிக்காட்டுகின்றன. அந்தச் சம்பவம் ஒரு குடும்பத்தினருக்கு ஆழ்ந்த துயரம் அளித்தது.

ஆனால் சிலர் அதை ஒரு செய் தியாகவோ, சிலர் அதனை ஆச்சரியக் காட்சியாகவோ வெளியிட்டனர். இந்தச் செயல் மனிதாபிமானத்தையும் தனியுரிமையையும் முற்றிலும் புறக்கணித்ததாகும். ஒரு மனிதனின் மரணம் கூட இன்று செய் தி என்ற பெயரில் வெளிப்படுகிறது.

இது ஊடக சுதந்திரத்தின் தவறான பயன்பாட்டுக்கான மிகத் தெளிவான உதாரணம் ஆகும். சந்தேகிக்கப்படும் சம்பவம் குறித்து முறையான விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டிய நேரத்தில், சிலர் அந்த பெண்ணின் உடலை புகைப்படமாக பதிவு செய்து பிரபல்யம் தேடும் உந்துதலுடன் சமூக ஊடகங்களில் பகிர்ந்துள்ளனர. இது குறித்த புகைப்படங்கள், அவரின் குடும்பத்தினருக்கே வலி ஏற்படுத்தும் விதமாக உள்ளன. இதேபோன்று, சிறுமிகள் மற்றும் பெண்கள் தொடர்பான பாலியல் குற்றச்செயல்கள், போதைப்பொருள் தொடர்பான கைது சம்பவங்கள் போன்றவை தொடர்பாகவும் மிகுந்த விவரங்களை உணர் வின்றி பகிரும் பண்பாடுகள் சமூக ஊடகங்களில் பரவலாக காணப்படுகின்றன. இவ்வாறு தகவல் பகிரும் சம்பவம் சம்பந்தப்பட்டவர்களின் தனிமனித உரிமையை, மனோ தடுமாற்றத்தை மேலும் சமூகத்தில் அவர்களின் அவமதிப்பை தூண்டும் வகையில் அமைந்து விடுகின்றன. இதனாலேயே ஊடக சுதந்திரம் இருக்க வேண்டும் என்பதே சரி, ஆனால் அது மனிதாபிமானம், மதிப்பு, உணர்வு மற்றும் சமூக பொறுப்பு உடனேயே அமைய வேண்டும் என்பது இன்று அவசியமாகியுள்ளது.

### சமூக ஊடகங்களின் தாக்கம்

சமூக ஊடகங்கள் மக்கள் மனநிலையைப் பெரிதும் பாதிக்கின்றன. துயரச் சம்பவங்களை அடிக்கடி காணும் பார்வையாளர்களுக்கு மன அழுத்தம் அதிகரிக்கின்றது. பொய்யான அல்லது முழுமையற்ற தகவல்கள் சமூகத்தில் குழப்பம் பயம், மற்றும் வெறுப்பை உருவாக்குகின்றன.

பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் சமூக அழுத்தத்தையும் நிந்தனைகளையும் எதிர் கொள்ள வேண்டிய நிலை ஏற்படுகிறது. இவை அனைத்தும் மனிதாபிமானமற்ற தகவல் பரிமாற்றத்தால் உருவாகும் சமூகப் பிரச்சினைகள் ஆகும்.

செய் திகளைத் தவறாகப் பயன்படுத்துவது சமூக நம்பிக்கையையும் நெறிமுறையையும் குலைக்கிறது. சமூக ஊடகங்கள் ஒரு வலுவான ஆயுதமாக மாறியுள்ளன. அவை நன்மைக்கும் தீமைக்கும் வழி வகுக்கக்கூடியவை. மனித உணர்வுகளைப் புரிந்துகொள்ளாமல் சம்பவங்களை வெளியிடுவது சமூகத்தில் மனிதம் என்ற மதிப்பை அழிக்கின்றது.

செய்திகளைச் சொல்லும் சுதந்திரம் ஒரு ஜன

தொடர்ச்சி▼

# செய்திகளை சொல்லும் சுதந்திரம்: மனிதாபிமானம் எங்கே?

**தொடர்ச்சி▲**

நாயகத்தின் அடிப்படை உரிமை. ஆனால் அந்தச் சுதந்திரம் மனிதாபிமானம், தனியுரிமை, மற்றும் நெறிமுறை ஆகியவற்றின் வரம்புக்குள் இருக்க வேண்டும் . ஒவ்வொரு தகவலும் ஒருவரின் வாழ்க்கையை மன நிலையை மற்றும் சமூக மரியாதையைத் தொடுகின்றது என்பதை உணர்ந்து செயல்படுதல் ஒவ்வொரு செய்தி வெளியிடுபவரதும் கடமையாகும்.

செய்தி வெளிப்பாடு உண்மையைச் சொல்லட்டும். ஆனால் மனிதாபிமானம் மங்கக் கூடாது. அப்போதுதான் நாம் தகவல் சுதந்திரம் கொண்ட சமூகமாக அல்ல மனித உணர்வுகள் நிறைந்த நாகரிக சமூகமாக மாற முடியும்.

ஆனால் அதே நேரத்தில் ஒரு தகவல் சமுதாயத்தை எப்படி பாதிக்கப்போகிறது அதிலுள்ள மனிதர்களின் மனநிலை எப்படி பாதிக்கப்படலாம் என்ற உணர்வும் அவசியம். ஒரு விபத்தில் உயிரிழந்தவர் ஒருவர். அந்த நபரின் குடும்பத்தினர் அந்தச் செய்தியை ஊடகங்களில் எவ்வாறு பார்ப்பார்கள்? அந்த உணர்வை ஊடகங்கள் மதிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது.

ஒரு செய்தி உலகுக்குத் தெரியவேண்டும். ஆனால் அதை சொல்வது எப்படி என்பதிலும் பொறுப்பு இருக்க வேண்டும். உணர்வுகளைக் கணக்கில் எடுக்காமல் செய்திகளை வெளியிடும் போது,

மனிதாபிமானம் காட்சியில் இருந்து மறைந்து விடுகிறது. இது ஊடக துறையின் ஆழமான மதிப்புக்கே வழிவகுக்கிறது. புகைப்படங்கள், வீடியோக்கள், சோகமான வார்த்தைகள், விவரிப்புக்கள் என இவை எல்லாம் மனச் சோர்வுக்கும், பயத்துக்கும் வழி வகுக்கின்றன. சிறுவர் , இளையோர்கள், பெரியவர்கள் என யாரும் விலக முடியாத அளவுக்கு அந்த தகவல்களை எதிர்கொள்கின்றனர். இதனால் மன அழுத்தம், உற்சாகக் குறைபாடு, ஆளில்லா பயம் போன்ற மனநிலை சிக்கல்கள் ஏற்படுகின்றன.

செய் திகளை பகிரும் சுதந்திரம் என்பது நம் கையிலுள்ள சக்தி. ஆனால் அந்த சக்தி மனிதாபிமானத்தின் அடிப்படையை மீறும்போது அது வலியல்ல வன்முறை. ஒரு செய்தியைப் பகிரும் முன்னே அது எத்தனை உயிர்களைப் புண்படுத்தும் என்பதைச் சிந்திக்க வேண்டும். மனித நெஞ்சங்களில் புன்முறுவலையோ, சிந்தனையையோ, பரிவு உணர் வையோ விதைக்காத செய்தி, ஒரு சமூகத்துக்குத் தேவையில்லை. செய்திகளைச் சொல்லும் சுதந்திரம் என்பது எவராலும் மறுக்க முடியாதது. ஆனால் அந்தச் சுதந்திரம் ஒரு குடும்பத்தின் உணர்வுகளை அழிக்கக் கூடியதாக இருந்தால் அதை சிந்திக்க வேண்டிய தருணம் இதுதான். மனிதாபிமானத்தின் மீது காட்டிய நாட்டமே நிரந்தரமாக நிலைக்கக் கூடியது. ஆகவே உண்மை கூறவேண்டும். ஆனால் உணர்வுகளை மதித்துக் கூற வேண்டும். அதுதான் உண்மையான ஊடக சுதந்திரத்தின் அடையாளமாகும்.

**மதுஷாயினி மதிவதனன்,**
ஊடக கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக் கழகம்.





# பொருளாதார மறுமலர்ச்சியும் வறுமையின் இருண்ட பக்கமும்

இலங்கை, ஒரு கடுமையான பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டுவரும் இந்தச் சமயத்தில், நாட்டின் பொருளாதாரம் ஒரு குறிப்பிடத்தக்க மறுமலர்ச்சியைக் கண்டுள்ளது. தேசிய அளவில் புள்ளிவிவரங்கள் நம்பிக்கையை அளிக்கின்றன. இந்த வளர்ச்சி, ஒரு தேசம் ஒரு பெரும் நெருக்கடியிலிருந்து எப்படி மீண்டெழ முடியும் என்பதற்கு ஒரு சான்றாக அமைகிறது. ஆனால், இந்த மறுமலர்ச்சியின் பலன்கள் அனைத்து மக்களுக்கும் சென்றடைந்துள்ளதா? என்பது ஒரு முக்கியமான கேள்வி. மறுபுறம், வறுமை மற்றும் சமூக ஏற்றத்தாழ்வுகள் குறித்த உலக வங்கியின் அறிக்கைகள், இந்த மீட்சிப் பயணத்தில் இன்னும் கடக்க வேண்டிய தூரம் அதிகம் என்பதை உணர்த்துகின்றன. தேசிய அளவிலான புள்ளிவிவரங்களுக்கும், சாதாரண மக்களின் அன்றாட வாழ்க்கைக்கும் இடையில் உள்ள இந்த முரண்பட்ட நிலை, நாம் கவனமாகப் புரிந்துகொள்ள வேண்டிய ஒரு முக்கியமான யதார்த்தமாகும்.

### பொருளாதார மீட்சியின் நம்பிக்கை

அண்மைக் காலங்களில், இலங்கையின் பொருளாதாரம் ஒரு குறிப்பிடத்தக்க மறுமலர்ச்சியைக் கண்டுள்ளது. இது வெறும் நம்பிக்கை மட்டுமல்ல, உறுதியான புள்ளி விவரங்களால் நிரூபிக்கப்பட்டுள்ளது. 2025 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் இலங்கை பொருளாதாரம் 4.9 வீதம் நேர்மறை வளர்ச்சி அடைந்துள்ளது என்று அரசின் தொகை மதிப்பு மற்றும் புள்ளி விவரவியல் திணைக்களம் (DCS) தெரிவித்துள்ளது.

இந்த வளர்ச்சி, ஒரு தேசம் தனது மிகக் கடுமையான நெருக்கடியிலிருந்து மீண்டு வருவதற்கு ஒரு சான்றாக அமைகிறது. இந்த வளர்ச்சியின் மூலம், மொத்த உள்நாட்டு உற்பத்தி 2024 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் ரூபா 2,749,504 மில்லியனில் இருந்து 2025 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் ரூபா 2,883,559 மில்லியனாக அதிகரித்துள்ளமை பதிவாகியுள்ளது.

துறைகள் வாரியான வளர்ச்சியைப் பார்க்கும்போது, பொருளாதாரத்தின் அனைத்து முக்கிய துறைகளும் மீண்டு வருகின்றன என்பது தெரிகிறது. விவசாய நடவடிக்கைகள் 2.0வீதம், தொழில்துறை 5.8 வீதம் மற்றும் சேவைத் துறைகள் 3.9 வீதம் என முறையே விரிவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த வளர்ச்சிகள், பொருளாதாரத்தின் அனைத்துப் பகுதிகளும் இணைந்து மீட்சிப் பாதையில் பயணிப்பதை உறுதிப்படுத்துகின்றன.

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவின் அண்மைய உரை, இந்த மாற்றங்களை உறுதி செய்ததுடன், நாட்டின் எதிர்காலப் பாதை குறித்த ஒரு விரிவான கண்ணோட்டத்தையும் வழங்கியுள்ளது. அவர், ஒரு நாடு பொருளாதார வீழ்ச்சிக்குப் பிறகு ஒரு தசாப்த காலத்தை இழப்பது வழக்கம் என்று ஒப்புக்கொண்டார். ஆனால், தற்போதைய அரசு அந்தக் காலத்தைப் பாதியாக்கி, அல்லது அதற்கும் குறைவான காலத்துக்குள் இந்த நிலைமையை மாற்ற உறுதிபூண்டுள்ளது என்று தெரிவித்தார்.

மேலும், சுங்கத் துறைப் பணிப்பாளர் ஜெனரல் சீவலி அருக்கோட, இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களில் இருந்து சுங்கத் துறை இதுவரை கிட்டத்தட்ட 430 பில்லியன் ரூபா வரி வருவாயைப் பெற்றுள்ளதாகத் தெரிவித்தார். இந்த ஆண்டு மொத்த வருவாய் 450 பில்லியன் ரூபாயை எட்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். இந்த வருவாய் அதிகரிப்பு, நாட்டின் நிதி நிலைமை வலுப்பெற்று வருவதற்கான மற்றொரு அறிகுறியாகும்.

### வறுமையின் இருண்ட பக்கம்

பொருளாதாரத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சி புள்ளி விவரங்களில் நம்பிக்கையை அளித்தாலும், அதன் பலன்கள் இன்னும் சாதாரண மக்களின் அன்றாட வாழ்க்கைக்குள் சென்றடையவில்லை. உலக வங்கியின் அறிக்கைகள் இந்தக் கசப்பான யதார்த்தத்தை வெளிப்படுத்துகின்றன. 2023 ஆம் ஆண்டில் இலங்கையின்

தொடர்ச்சி▼

# பொருளாதார மறுமலர்ச்சியும் வறுமையின் இருண்ட பக்கமும்

தொடர்ச்சி▲

25.9 வீத மக்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்தனர். இது தொடர்ச்சியாக நான்காவது ஆண்டாக வறுமை அதிகரித்துள்ளதைக் காட்டுகிறது.

மேலும், உலக வங்கி, இலங்கையின் பொருளாதாரம் 2024 இல் 2.2 வீதம் மற்றும் 2025 இல் 2.5 வீதம் என ஒரு மிதமான வளர்ச்சியைக் காணும் என்று கணித்துள்ளது. இந்த மிதமான வளர்ச்சி, நாட்டின் வறுமைப் பிரச்சினையை உடனடியாகத் தீர்க்காது. உலக வங்கியின் அறிக்கை, 2026 ஆம் ஆண்டுவரை நாட்டின் வறுமை வீதம் 22 விதத்துக்கும் அதிகமாகவே இருக்கும் என எச்சரிக்கிறது.

இந்த புள்ளி விவரங்கள், பொருளாதார வளர்ச்சிக்கும், சமூக நலனுக்கும் இடையிலான இடைவெளியைச் சுட்டிக்காட்டுகின்றன. பொருளாதார நெருக்கடியின் சுமை பெரும்பாலும் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள் மீதே விழுந்துள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் (ஐஆகு) நிதியுதவி திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட சீர்திருத்தங்கள், குறிப்பாக மானியங்கள் நீக்கப்பட்டு, வரிகள் அதிகரிக்கப்பட்டதால், அத்தியாவசிய பொருள்களின் விலைவாசி உயர்வு மற்றும் வருமான வீழ்ச்சி காரணமாக பலரும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

### முன்னோக்கிச்செல்லும் பாதை

இலங்கையின் எதிர்காலம், இந்த இரு வேறு யதார்த் தங்களை எவ்வாறு சமநிலைப்படுத்துகிறது என்பதைப் பொறுத்து அமையும். பொருளாதார வளர்ச்சி என்பது வெறுமனே புள்ளிவிவரங்கள் மற்றும் குறியீடுகளை மேம்படுத்துவது மட்டுமல்ல. அது சமூகத்தின் அனைத்துத் தரப்பு மக்களையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். இதை அடைய பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள் ளலாம்.

### வறுமைக் குறைப்பு திட்டங்கள்

வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ள குடும்பங்களுக்கு இலக்கு வைக்கப்பட்ட நிதி உதவிகள், உணவுப் பாதுகாப்பு திட்டங்கள் மற்றும் நலத்திட்டங்களை வலுப்படுத்துவதன் மூலம் உடனடியாக மக்களின் நிதிச் சுமையைக் குறைக்க முடியும்.

### வருமானத்தை உருவாக்கும் வாய்ப்புகள்

குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கான சுயதொழில் வாய்ப்புகள் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களை ஊக்குவிக்க வேண்டும். விவசாயம், சிறு கைத்தொழில்கள் மற்றும் சேவைத் துறை போன்ற துறைகளில் உள்ளூர் வேலை வாய்ப்புகளை உரு வாக்குவதன் மூலம் மக்களின் வருமானத்தை அதிகரிக்க முடியும்.

### கல்வி மற்றும் சுகாதார துறையில் முதலீடு

பொருளாதார நெருக்கடியின் போது கல்வி மற்றும் சுகாதார சேவைகளுக்கான அணுகல் பெரிதும் பாதிக்கப்பட்டது. இந்த அத்தியாவசிய சேவைகளுக்கான முதலீட்டை அதிகரிப்பதன் மூலம் மனித மூலதனத்தை மேம்படுத்த முடியும். தரமான கல்வி மற்றும் சுகாதார சேவைகள், நீண்டகாலத்தில் பொருளாதார வளர்ச்சிக்கு அடித்தளமிடும்.

### அரசின் பொறுப்பு

சட்டத்தின் ஆட்சி, ஊழல் ஒழிப்பு மற்றும் நவீன அரச சேவையை கட்டி எழுப்புதல் போன்ற சீர்திருத்தங்கள் மிகவும் முக்கியமானவை. இவை, மக்களுக்கு அரசின் மீது நம்பிக்கையை ஏற்படுத்துவதுடன், ஒரு நிலையான எதிர்காலத்துக்கும் வழிவகுக்கும்.

### வெளிநாட்டு உறவுகளின் புதிய அத்தியாயம்

இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு சர்வதேச ஆதரவும் ஒரு முக்கிய காரணியாக உள்ளது. ஜனவரி மாதம் ஜனாதிபதி சீனாவுக்கு விஜயம் செய்தபோது, சீன உதவியின் கீழ் நமது நாட்டில் தடைப்பட்ட திட்டங்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கு ஆதரவளிக்குமாறு கோரினார். அதன் பலனாக, சீன எக்ஸிம் வங்கி 2.5 வீதம் முதல் 3.5 வீதம் வரையிலான குறைந்த வட்டி வீதத்தில் யுவானில் கடன் வழங்க முன்வந்துள்ளது. இது, சர்வதேச உறவுகளில் இலங்கையின் புதிய நிலைப்பாட்டையும், வெளிநாட்டு உதவிகளை ஈர்க்கும் திறனையும் காட்டுகிறது.

இதேபோல், ஜப்பான் விஜயத்தின்போது 1.2 பில்லியன் டொலர் மதிப்புள்ள மற்றொரு பாரிய திட்டத்துக்கு ஒப்புதல் பெறப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவை, வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதில் அரசு அடைந்துள்ள வெற்றியை உறுதிப்படுத்துகின்றன. துறைமுக நகரில் 1.4 பில்லியன் டொலர் மதிப்புள்ள 4 திட்டங்களுக்கு ஏற்கனவே அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்த ஆண்டு சுற்றுலாத் துறை, ஏற்றுமதி மற்றும் வெளிநாட்டு வருமானம் ஆகியவற்றில் மிக உயர்ந்த வளர்ச்சி கொண்ட ஆண்டாகவும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### நம்பிக்கையான எதிர்காலத்தை நோக்கி

இலங்கை ஒரு பெரும் நெருக்கடியிலிருந்து மீண்டு, ஒரு வலுவான பொருளாதார அடித்தளத்தைக் கொண்ட நாடாக மாறி வருகிறது என்பதைத் தெளிவாக உணர்த் துகிறது. இது வெறும் புள்ளிவிவரங்களின் வெற்றி மட்டுமல்ல. அது நாட்டின் அரசியல், சமூக மற்றும் நிர்வாக அமைப்புகளின் மாற்றங்களையும் உள்ளடக் கியது. சட்டத்தின் ஆட்சி, ஊழல் ஒழிப்பு மற்றும் அரச சேவையை நவீனமயமாக்குதல் போன்ற பல பரிமாணங்களில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள், எதிர்கால சவால்களுக்கு நாட்டைத் தயார்படுத்துகின்றன.

பொருளாதார நெருக்கடி, மக்களுக்குப் பெரும் துயரங்களைக் கொடுத்தது. அந்த அனுபவத்திலிருந்து பாடம் கற்றுக்கொண்ட இந்த அரசு, மீண்டும் இதுபோன்ற நெருக்கடி ஏற்படாதவாறு நாட்டை கட்டியெழுப்ப தயாராக உள்ளது. இந்த இலக்கை அடைய, உட்கட்டமைப்பு மேம்பாடு, சமூக சீர்திருத்தங்கள், மற்றும் சர்வதேச முதலீடுகளை ஈர்ப்பது என அனைத்துத் துறைகளிலும் ஒருங்கிணைந்த அணுகுமுறை தேவை.

ஒரு புதிய இலங்கையை கட்டியெழுப்பும் பயணத்தில் ஒவ்வொரு குடிமகனும் ஒரு அங்கம். இன்று நாம் கண்டுவரும் நேர்மறையான மாற்றங்கள் இலங்கையின் எதிர்காலம் ஒரு நம்பிக்கையான பாதையில் செல்கிறது என்பதை உறுதிப்படுத்துகின்றன.

**ஜெ . மங்களதர்ஷினி,**
மூன்றாம் வருடம்,
ஊடக கற்கைகள் துறை,
யாழ் பல்கலைக்கழகம்.

# திடீரென தீப்பற்றி எரிந்த பஸ் ராஜஸ்தானில் 20 பேர் மரணம்



ராஜஸ்தானில் திடீரென பஸ் ஒன்று தீப்பற்றி எரிந்ததில் 20 பேர் உயிரிழந்துள்ளனர்.

ராஜஸ்தானின் ஜெய்சால்மரிலிருந்து ஜோத்பூர் நோக்கி செல்லும் தனியார் பஸ் நேற்று பிற்பகல் 57 பயணிகளுடன் புறப்பட்டது. போர் அருங்காட்சியகம் அருகே தையத் கிராமத்தில் சென்றுகொண்டிருந்த போது அந்த பஸ்ஸின் பின்புறத்திலிருந்து திடீரென தீப்பற்றி பஸ் முழுவதும் வேகமாக பரவியது.

இதில், பயணிகள் அவசரமாக வெளியேற முடியாமல் சிக்கிக் கொண்டதால் 20 பேர் உடல் கருகி பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும், 15 பயணிகள் கடுமையான தீக்காயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

ராஜஸ்தான் முதல்வர் பஜன்லால் சர்மா, பஸ் விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு இரங்கல் தெரிவித்துள்ளதுடன், காயமடைந்தவர்களுக்கு உரிய சிகிச்சை அளிக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

# விஜய் 7 மணி நேரம் தாமதமாக வந்ததையே கரூரில் கூட்ட நெரிசல் ஏற்படுவதற்கு காரணம்

## சட்டப்பேரவையில் முதல்வர் ஸ்டாலின் விளக்கம்

செப்ரெம்பர் 17 ஆம் திகதி மதியம் 12 மணிக்கு த.வெ.க. தலைவர் கரூர் வருவார் என அக்கட்சியின் பொதுச் செயலாளர் அறிவித்திருந்த நிலையில், 7 மணி நேரம் தாமதமாக அவர் வந்ததே கூட்ட நெரிசலுக்கு முக்கிய காரணம் என்று சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவைக் கூட்டத் தொடரின் இரண்டாம் நாளான இன்று, கரூர் கூட்ட நெரிசல் சம்பவம் தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் விளக்கம் அளித்தார். அப்போது அவர் உரையாற்றுகையில்,

“கரூர் துயரச் சம்பவம் ஒட்டுமொத்த தமிழக மக்களின் மனதையும் உலுக்கியது. நம் அனைவரையும் பெரும் அதிர்ச்சிக்கும், சோகத்துக்கும் உள்ளாக்கியது. இறந்துபோனவர்களுக்கு ஆழ்ந்த அஞ்சலியை நான் செலுத்துகிறேன். உறவுகளை இழந்த அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த செப்ரெம்பர் 17ஆம் திகதி கரூர் வேலுசாமிபுரத்தில் த.வெ.க. தலைவரின் அரசியல் நிகழ்ச்சி நடைபெற்றது. அக்கட்சியின் கரூர் மேற்கு மாவட்டச் செயலாளர் இதற்கான அனுமதியைக் கோரி இருந்தார். அவர் அனுமதி கோரிய இடங்களில் போக்குவரத்து நெரிசல் ஏற்படும், பொதுமக்களுக்கு தொல்லை ஏற்படும் என்பதாலும் பாதுகாப்பு காரணங்களாலும் அனுமதி வழங்கப்படவில்லை.



செப்ரெம்பர் 25 ஆம் திகதி காலை லைட்ஹவுஸ் கோர்னர் அல்லது உழவர் சந்தைப் பகுதியில் அனுமதி கோரிய மனுவுக்கும், கூட்ட அளவு மதிப்பீடு மற்றும் பாதுகாப்பு காரணங்களால் அனுமதி வழங்க இயலவில்லை.

பின்பு, செப்ரெம்பர் 25 அன்று அக்கட்சியின் கரூர் மேற்கு மாவட்டச் செயலாளர், வேலுசாமிபுரத்தில் 27 ஆம் திகதி அன்று மக்கள் சந்திப்பு நடத்த அனுமதி கோரினார். மனு ஏற்கப்பட்டு, 11 நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கப்பட்டது. கரூர் மாவட்ட பொலிஸ் கண்காணிப்பாளர் தலைமையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. மூன்று கூடுதல் பொலிஸ் கண்காணிப்பாளர்கள், 5 துணை பொலிஸ் கண்காணிப்பாளர்கள், 18 ஆய்வாளர்கள், 75 உதவி ஆய்வாளர்கள், ஆயுதப்படை பொலிஸார் உள்ளிட்ட 515 பொலிஸார் கரூர் மாவட்டத்தில் இருந்து பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

மேலும், வெளி மாவட்டங்களில் இருந்து ஒரு பொலிஸ் துணை கண்காணிப்பாளர், 2 ஆய்வாளர்கள், 8 உதவி ஆய்வாளர்கள், 60 ஆயுதப்படை பொலிஸார், 20 அதிவிரைவு பொலிஸார் என 91 பேர் வரவழைக்கப்பட்டிருந்தனர். அன்றைய தினம் மொத்தம் 606 பேர் பொலிஸார் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

பொலிஸை பொறுத்தவரை வழக்கமாக அரசியல் பரப்புரை கூட்டங்களுக்கு வழங்கப்படும் பாதுகாப்பு பொலிஸாரின் எண்ணிக்கையைவிட அதிகமாகவே வழங்கப்பட்டிருந்தது. பொதுக்கூட்ட நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களால் 10,000 பேர் வருவார்கள் என தெரிவிக்கப்பட்ட நிலையில் அதைவிட கூட்டம் அதிகமாக வரும் என எதிர்பார்த்து கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

கூட்டம் நடத்த அனுமதி கோரிய கடிதத்தில் கூட்டம் நடத்த மாலை 3 மணி முதல் இரவு 10 மணி வரை என குறிப்பிட்டிருந்தார்கள். ஆனால், செய்தியாளர் சந்திப்பு மற்றும் சமூக ஊடகங்களில் மதியம் 12 மணிக்கு கட்சியின் தலைவர் கரூர் வருவார் என அக்கட்சியின் பொதுச் செயலாளர் தெரிவித்திருந்தார். இதனால், கரூரில் காலை முதலே மக்கள் வரத் தொடங்கினார்.

செப்ரெம்பர் 27 ஆம் திகதி அக்கட்சியின் தலைவர் சென்னையில் இருந்து காலை 8.40 மணிக்குப் புறப்பட்டு 9.25 மணிக்கு திருச்சி வந்தடைந்தார். அதன் பின்னர் நாமக்கல் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பிறகு கரூருக்கு இரவு 7 மணிக்கு வந்துள்ளார். அதாவது அறிவிக்கப்பட்ட 12 மணிக்குப் பதிலாக 7 மணி நேரம் கடந்துதான் வந்தார். இந்த காலதாமதம் கூட்ட நெரிசலுக்கு முக்கிய காரணமாக இருந்தது.” என்று தெரிவித்துள்ளார்.



# 4 பணயக்கைதிகளின் உடலங்களை இஸ்ரேலிடம் ஒப்படைத்த ஹமாஸ்





ஹமாஸ் அமைப்பு மேலும் 4 பணயக் கைதிகளின் உடலங்களை ஒப்படைத் துள்ளதாக இஸ்ரேல் பாதுகாப்புப் படைகள் தெரிவித்துள்ளன.

எனினும் உயிரிழந்த அனைத்து பணயக்கைதிகளின் உடலங்களை ஒப்படைப்பதில் தாமதம் ஏற்படுவது குறித்து கவலை அதிகரித்து வருகிறது,

காசா பகுதியில் நிலவும் சூழ்நிலைகளினால் உடலங்களை கையளிக்கும் செயல்முறை சிக்கலாகி வருவதாக ஹமாஸ் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இஸ்ரேலில் வைக்கப்பட்டிருந்த 45 பாலஸ்தீனியர்களின் உடலங்கள் நேற்று காசாவிற்கு மீள அனுப்பப்பட்டன என செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, எந்தவொரு தாமதம் அல்லது வேண்டுமென்றே தவிர்ப்பது ஒப்பந்தத்தின் மொத்த மீறலாகக் கருதப்படும்.

எனவே, அதற்கேற்ப பதிலளிக்கப்படும் என்று இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சர் ஹமாஸை எச்சரித்துள்ளார்.

எனினும், இறந்த பணயக்கைதிகளின் உடல்களை கண்டுபிடிப்பதில் சிரமம் ஏற்படுவதன் காரணமாகவே, அவர்களின் உடலங்களை ஒப்படைப்பதில் தாமதத்தை ஏற்படுத்துவதாக ஹமாஸ் கூறுகிறது.

இதற்கிடையில் ஹமாஸ் ஆயுதங்களைக் களையவில்லை என்றால், அமெரிக்கா அவர்களின் ஆயுதங்களைக் களையும் என்றும், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

அது விரைவாகவும், ஒருவேளை தாக்குதல்களாகவும் நடக்கும் என்றும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

# மடகஸ்காரில் ஜனாதிபதி பதவி நீக்கம் நாடளுமன்றில் பிரேரணை நிறைவேற்றம்

மடகஸ்காரில் நிலவும் ஆழ்ந்த அரசியல் நெருக்கடிக்கு மத்தியில், அந்த நாட்டின் ஜனாதிபதி ஆண்ட்ரி ராஜோலினாவை பதவியில் இருந்து நீக்குவதற்காக நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்கெடுப்பு நடத்தித் தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர்.

ஜனாதிபதி, சட்டமன்றத்தைக் கலைப்பதாக ஆணை பிறப்பித்திருந்த நிலையிலும், நாடாளுமன்றம் தனது வாக்கெடுப்பை நடத்தியுள்ளது.

நாட்டில் ஏற்பட்ட மின்சார நெருக்கடி மற்றும் நீர்ப்பற்றாக்குறை போன்ற காரணங்களால் கடந்த பல வாரங்களாக "ஜென்-சீ" இளைஞர்கள் குழுவினர் போராட்டம் நடத்திவருவதுடன் ஜனாதிபதியையும் பதவி விலகக் கோரி தொடர் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர்.

இந்த ஆர்ப்பாட்டங்களுக்கு நேற்று



அந்த நாட்டின் உயர்மட்ட இராணுவப் பிரிவொன்று ஆதரவளித்ததையடுத்து, ஜனாதிபதி ஆண்ட்ரி ராஜோலினா நாட்டை விட்டு வெளியேறி தலைமறைவாகி உள்ளார்.

இந்தநிலையில், ஜனாதிபதி ஆண்ட்ரி ராஜோலினா, தான் நாட்டை விட்டு வெளியேறிய பின்னர் நாடாளுமன்றத்தை கலைப்பதாக பேஸ்புக் ஊடாக ஆணை பிறப்பித்தார்.

எனினும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த ஆணையை நிராகரித்து, ஜனாதிபதி மீதான பதவி நீக்க பிரேரணையை நிறைவேற்ற வாக்களித்துள்ளனர்.

எவ்வாறாயினும், ஜனாதிபதி தற்போது எங்கு இருக்கிறார் என்பது தெளிவாகத் தெரியவில்லை. அவர் தலைமறைவாக இருக்கும் ஒரு பாதுகாப்பான இடத்திலிருந்து நாட்டு மக்களுக்கு உரையாற்றி, நாடாளுமன்றத்தின் வாக்கெடுப்புச் செல்லாது என நிராகரித்துள்ளார்.

இந்தநிலையில் ஜனாதிபதி ஆண்ட்ரி ராஜோலினாவுக்கு எதிராக இராணுவப் பிரிவினர் மற்றும் இளைஞர்கள் ஒன்று சேர்ந்திருப்பது, மடகஸ்காரின் அரசியல் ஸ்திரத்தன்மையை கேள்விக்குறியாக்கியுள்ளதாக அரசியல் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

கனடா முரசு

புதன்கிழமை 15/10/2025

பிரிட்டிஷ் கொலம்பியாவில் பணம் பறிக்கும் கும்பல்




C2



# நோர்த் யோர்க்கில் கட்டடம் வெடிப்பு; 7 பேர் வைத்தியசாலையில் சேர்ப்பு

கனடாவின் நோர்த் யார்க் பகுதியில் கட்டுமானப்பணி இடம்பெற்றுக்கொண்டிருந்த கட்டத்தில் ஏற்பட்ட வெடிப்பில் ஏழு தொழிலாளர்கள் காயமடைந்தனர்.

இதில் நான்கு பேரின் நிலை மிகக் கவலைக்கிடமாக உள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

எஸ்தர் ஷைனர் புல்வர்ட் மற்றும் மெக்மகான் டிரைவ் சந்திக்கும் இடத்தில் உள்ள கட்டடம் ஒன்றில் வெடிப்பு ஏற்பட்டதாக தகவல் கிடைக்கப் பெற்றதாக தீயணைப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

“வாயு வெடிப்பு ஏற்பட்டதாக எங்களுக்கு தகவல் வந்தது. சிலர் எரி காயங்களுடன் இருந்தனர். ஆனால், எங்கள் குழு வந்த போது கட்டடத்தில் தீ இல்லை.” என்று தடொரொண்டோ தீயணைப்பு சேவை அதிகாரி பால் ஓ’பிரையன் தெரிவித்துள்ளார்.

இந்த வெடிப்பு சம்பவம் கட்டடத்தின் 22ஆம் மாடியில் உள்ள பென்ட்ஹவுஸ் மெக்கானிக்கல் அறையில் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதில் இருந்த நான்கு தொழிலாளர்கள் தீவிர காயங்களுடனும் மேலும் மூன்று பேர் லேசான காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

டொரொண்டோ தீயணைப்பு துறையிலிருந்து 15 இற்கும் மேற்பட்ட வாகனங்கள் சம்பவ இடத்துக்கு அனுப்பப்பட்டன.

கட்டடத்தில் இருந்தவர்கள் அனைவரும் வெளியேற்றப்பட்டனர். இந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.



# சீன மின்சார வாகனங்களுக்கான இறக்குமதி வரியை நீக்க வேண்டாம்

## ஒன்டாரியோ மாகாண முதல்வர் டக் போர்ட் தெரிவிப்பு



கனடா சீன மின்சார வாகனங்கள் மீதான இறக்குமதி வரிகளை நீக்கக் கூடாது என்று ஒன்டாரியோ மாகாண முதல்வர் டக் போர்ட் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

அவர் இந்தக் கருத்தை கனடாவின் எம்பயர் கிளப் நிகழ்வில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

சாஸ்காட்சுவான் மாகாண முதல்வர் ஸ்கொட் மோ மற்றும் மானிடோபா முதல்வர் வாப் கினுவ் ஆகியோர் வரிகளை நீக்க வேண்டுமென கோரி வருகின்றனர் என்று தெரிவித்துள்ளார்.

தங்களது மாகாணங்களின் நலன்களை முன்னிலைப்படுத்தி இந்த கோரிக்கைகளை அவர்கள் முன்வைக்கின்றனர் என்றும் டக் போர்ட் தெரிவித்துள்ளார்.

அதேவிதமாக தாமும் தமது மாகாணத்தின் நலன்களை பேணும் கடப்பாட்டின் அடிப்படையில் சீன மின்சார வாகனங்களுக்கான வரிகள் நீக்கப்படக் கூடாது என கோருவதாகத் தெரிவித்துள்ளார்.

“அவர்களின் நிலைப்பாட்டை மதிக்கிறேன். ஆனால் சீனாவுக்கு விதிக்கப்பட்ட வரிகளை நீக்க வேண்டிய அவசியமே இல்லை. எந்த சூழ்நிலையிலும் அது நடக்கக் கூடாது,” என அவர் வலியுறுத்தியுள்ளார்.

கனடா கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் முதல் சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் அனைத்து மின்சார வாகனங்களுக்கும் 100 வீத சுங்கவரி விதித்துள்ளது.

அதற்கு கூடுதலாக சீன உருக்கு மற்றும் அலுமினியத்திற்கும் 25 வீத வரி அமுலில் உள்ளது.




# பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் பணம் பறிக்கும் கும்பல் அட்டகாசம்

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் உள்ள சர்ரே நகரம் மிரட்டிப் பணம் பறிக்கும் கும்பல்களின் அச்சுறுத்தலால் அச்சத்தில் உள்ளது.

இந்த நிலையில், அந்தக் கும்பலின் வன்முறையால் ஒருவர் காயமடைந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை, 103-ஏ அவென்யூவில் உள்ள ஒரு வீட்டிற்குள் புகுந்த மர்ம நபர்கள், அங்கிருந்த ஒரு பெண்ணை சுட்டுக் காயப்படுத்தினர்.

சுடப்பட்ட அந்தப் பெண் தற்போது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, உயிருக்குப் போராடி வருகின்றார் என சர்ரே பொலிஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

இந்தப் பெண் சுடப்பட்ட சம்பவம், மிரட்டிப் பணம் பறிக்கும் கும்பலின் தொடர்ச்சியான நடவடிக்கைகளுடன் தொடர்புடையது என்றும், இந்த வன்முறையால் காயமடைந்த முதல் நபர் இவர் தான் என்றும் பொலிஸ் சந்தேகம் தெரிவித்துள்ளது.

பணம் கேட்டு அச்சுறுத்தும் இக்கும்பல்கள், தங்கள் அச்சுறுத்தல்களுக்கு அடிபணியாதவர்களைக் குறிவைத்துத் தாக்குவதைத் தற்போது தொடங்கியுள்ளன.

இதனால், கனடாவில் வாழும் குறிப்பாகத் தெற்காசிய சமூகத்தினர் மத்தியில் பதற்றம் நிலவுகிறது.

இந்தச் சம்பவம் குறித்து பொலிஸார் தீவிர விசாரணையை முடுக்கிவிட்டுள்ளதோடு, பணம் கேட்டு மிரட்டப்படும் எவரும் உடனடியாகப் புகார் அளிக்குமாறு எச்சரித்துள்ளது.




# பியர்சன் நிலையத்திற்கு அண்மையில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் மரணம்

கனடாவின் மிசிசாகா பகுதியில் உள்ள பியர்சன் சர்வதேச விமான நிலையம் அருகே ஞாயிறு இரவு இடம்பெற்ற வாகன விபத்தில், ஒரு இளைஞர் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளை செலுத்தியவரே இவ்வாறு பரிதாபமாக உயிரிழந்துள்ளார். இந்த விபத்து விமான நிலைய வீதி மற்றும் ஓர்லாண்டோ சந்திக்கும் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிள் மற்றும் கார் நேருக்கு நேர் மோதி விபத்து ஏற்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

விபத்தில் கடுமையாக காயமடைந்த 20 வயது மதிக்கத்தக்க இளைஞர், மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

ஆனால், திங்கள் கிழமை காலை, அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகின்றது.

# கனடாவின் பல மாகாணங்களில் பிஸ்தா பொருள்கள் மீளப்பெறல்




கனடாவின் ஒன்ராரியோ, க்யூபெக் மற்றும் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணங்களில் விற்கப்பட்ட பிஸ்தா மற்றும் அதனுடன் தொடர்புடைய உணவுப் பொருள்கள் பலவும் சால்மொனெல்லா என்ற ஆபத்தான உணவுக் கிருமி தொற்றின் காரணமாக திரும்பப் பெறப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கை, நாடு தழுவிய ரீதியில் நடைபெற்று வரும் சால்மொனெல்லா தொற்று விசாரணையுடன் தொடர்புடையதாக கனடா அரசு அறிவித்துள்ளது.

பொதுமக்களுக்கும் வணிக நிறுவனங்களுக்கும், இந்தப் பொருள்களை உண்ணவோ, விற்கவோ, பரிமாறவோ, விநியோகிக்கவோ கூடாது என்று அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஒன்ராரியோ மாகாணம் கொலிங்வுட் நகரில் ஒன்லைனில் விற்கப்பட்ட பிஸ்தா பாக்லாவா மற்றும் பிஸ்தா சீஸ்கேக், டொராண்டோவில் விற்கப்பட்ட பெரரல் பிராண்டின் ஹல்வா பிஸ்தான டெசர்ட், சில பொருட்களில் இவ்வாறு சல்மொனெல்லா தொற்று தாக்கம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவை ஒன்ராரியோ மற்றும் க்யூபெக் மாகாணங்களில் விற்கப்பட்டன. வியாழக்கிழமை வெளியிடப்பட்ட மற்றொரு அறிவிப்பில், பிராண்டு பெயர் குறிப்பிடப்படாத பல அளவுகளில் பிஸ்தாக்கள் திரும்பப் பெறப்பட்டன.

மூன்லைட் க்ரோசர் நிறுவனம் விற்ற பிஸ்தா பொருள்களும் தொற்று அபாயத்திற்காக திரும்பப் பெறப்பட்டுள்ளன.

இந்த உணவு பொருள்களை உண்ட பிறகு உடல்நலக் குறைவு ஏற்பட்டால் உடனடியாக மருத்துவரை அணுக வேண்டும் என அரசு அறிவுறுத்தியுள்ளது.